பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 23 ஐ: அவ்: 15 இதழ்: 83
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-5-77

## கங்கையில் படகு கவிழ்ந்து 23 பேர் பலி!

மாத்தறை, புதன்

மாத்தறை நில்வள கங்கை ஆற்றில் நிகழ்ந்த படகு விபத்து ஒன்றில் 23 பேரைக் காணவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர். இவர்களில் அநேகர் குழந்தைகள். இவர்கள் நீரில் மூழ்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மாத்தறையைச் சேர்ந்த 51 பேர் படகில் உல்லாசப் பயணம் சென்றபோது இப் படகு கவிழ்ந்தது.

இதை அடுத்து தேடுதலின் பின் 28 பேர் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டனர். இவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# தீவுத் தொகுதி, திருமலையில் சுயாட்சிக்கழகம் போட்டி!

## உடுப்பிட்டியில் நிறுத்தாது; தெரிவுக்குழு நியமனம்

**வண்ணார்பண்ணை, வியாழன்**

**தமிழர்சுயாட்சிக்கழக சார்பில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினத்தையும், திருகோணமலை தொகுதியில் கழகப் பொதுச் செயலாளர் திரு. செ. கோடீஸ்வரனையும் அடுத்த தேர்தலில் நிறுத்துவதென சுயாட்சிக் கழகம் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்துள்ளது**

திரு. வி. நவரத்தினம் தலைமையில் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய கழகச் செயற்குழு அபேட்சகர்கள் மனு பற்றி ஆராய்ந்து மேற்கண்டமுடிவை எடுத்துள்ளது.

மற்றும் தொகுதிகளுக்கான அபேட்சகர்கள் பட்டியலை சில தினங்களில் வெளியிடுவதென்றும் குழு முடிவுசெய்துள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கழகம் போட்டியிடுவது பற்றியும், அபேட்சகர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமாகவும் ஆராய்ந்து முடிவெடுப்பதற்காக கூட்டப்பட்ட இக்குழு கூட்ட ஆரம்பத்தில் மறைந்த தலைவர் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியதுடன், அஞ்சலித் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கடந்த முப்பது ஆண்டுகளாக சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக இலங்கைத் தமிழர்களின் எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமைதாங்கி தமிழ்மக்களைப் பாதுகாத்துவந்த தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் மறைவு குறித்து தமிழர் சுயாட்சிக் கழகம் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறது என்று அந்த அஞ்சலித் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் சுயாட்சிக்கழகத்திற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை பற்றியும் இதன்பின் கடந்த மாதம் கொழும்பில் கூடிய தமிழர்கூட்டணியின் தேர்தல் வேட்பாளர் நியமனக்குழு நிறைவேற்றிய தீர்மானம் பற்றியும் இச் செயற்குழுவில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து சுயாட்சிக்கழகம் தேர்தலில் போட்டியிடும் தொகுதிகள்பற்றி ஆராயப்பட்டன.

**வேட்பாளர் தெரிவுக்குழு**

வட்டுக்கோட்டை, நல்லூர், முல்லைத்தீவு, கோப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் கழகவேட்பாளர் நிலைமைகள்பற்றியும் ஆராயப்பட்டன.

இந்த அபேட்சகர் நிலைமைகள் பற்றி அடுத்த செயற்குழு

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஐந்து தொகுதி வேண்டும் வேட்பாளர் தெரிவு நாமே"

### காங்கிரஸ் கமிட்டி தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒற்றுமை தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்ற காரணத்திற்காகத் தமிழ்க்காங்கிரஸ் வடக்கில், எந்த ஐந்து தொகுதியையும் ஏற்றுக் கொள்வதென யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

வடக்கில் உள்ள 14 தொகுதிகளில் தமிழ்க்காங்கிரஸிற்கு எந்த 5 தொகுதியையும் ஒதுக்கவேண்டும் என்று இந்த 5 தொகுதிகளுக்கும், அபேட்சகர்களை நிறுத்தும் அதிகாரம், காங்கிரஸ் நிர்வாகசபைக்கே வழங்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

தேர்தல்பற்றி கூட்டணித் தலைமைப்பீடத்துடனும், நியமனக் குழுவுடனும் பேச்சு

(8-ம் பக்கம் பார்க்க)

வேலரும் மயிலரும்



வேலர்: திடீர் தோசை திடீர் சாம்பார் மாதிரி இது திடீர் காதல்...... தமிழ் இனத்தில் எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு திடீர் காதல் ஏற்பட்டிருக்கு!

மயிலர்: வாக்குச்சீட்டுக்கு வலைபோடுகினம்.

— சுந்தர்.

## "உடுப்பிட்டி வேட்பாளரை ஆதரிப்பது என் கடமை"

### ஆதரவாளர் மத்தியில் ஜெயக்கொடி

நெல்லியடி, புதன்

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீடம் ஒரு தொகுதிக்கு என்றாலும் சிறுபான்மைத தமிழருக்கு கொடுக்க வேண்டும் என்றுயோசனை கூறியதின்படி திரு த இராசலிங்கததை உடுப்பிட்டி வேட்பாளராக நியமிததுள்ளமையினால் அவரை ஆதரிப்பது எங்கள் கடமையாகும் அதனால் தான் பாராளுமன்ற அரசியலுக்கு முழுக்குப் போட்டதாக கருதவேண்டாம்"

இவ்வாறு உடுப்பிட்டி எம்பி திரு ஜெயக்கொடி தம்மைச் சந்தித்த ஆதரவாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ஒரு தொண்டன் சேவைசெய்வதற்கு கட்டாயம் பாராளுமன்றப்பிரதிநிதியாகஇருக்க வேண்டிய அவசியமில்லை. பாராளுமன்றப் பிரதிநிதியாய் இல்லாமலேதீவிரமாக விடுதலை இயக்கததில் ஈடுபடமுடியும்.

பாராளுமன்றப் பிரதிநிதியாக இல்லாவிட்டாலும் தொடர்ந்து விடுதலைஇயக்கத்தில் பங்குபற்றுவேன். ஆகையால் தமிழர் விடுதலைக்கூட்டணித தீர்மானத்திற்குக் கட்டுப்பாடாக இயங்கவேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதன் பிரகாரம் சொல்லில் ஒன்று செயலில் ஒன்றல்லாமல் நாம் நடந்துகொள்ளவேண்டும்.'

(நெல்-நி)



## சுந்தரர் திடீர் சுகவீனம்; விசேட சிகிச்சைக்கு கொழும்பு விரைவு!

யாழ்ப்பாணம், வியா.

ஈழத் தமிழர் தொண்டர் சபை அமைப்பாளர் திரு சி. சுந்தரலிங்கம், நேற்றுமுன் தினம் நல்லூரில் திடீரென மயக்கமுற்று விழுந்ததைத் தொடர்ந்து விசேட சிகிச்சைக்காக கொழும்பு சென்றுள்ளார்.

முன்னாள் வவுனியா எம். பியும் முன்னாள் வர்த்தக அமைச்சருமான இவர் தமது பாரியாருடன், கோவிலுக்குச் சென்று வழிபட்டபின் திரும்பும்போதே மயக்கமடைந்தார். சிறிது நேரத்தின்பின் மயக்கம் தெளிந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. டாக்டரின் ஆலோசனையின்படி விசேட சிகிச்சைக்காக கொழும்பு சென்றுள்ளார்.

85 வயதான திரு. சி. சுந்தரலிங்கம், அடுத்த தேர்தலில், தனித்தமிழ்நாடுகொள்கையை

(8ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### தேவை

அரிசி ஆலைக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தங்க இடம் கொடுக்கப்படும். கொன்ருக்கில் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், யாழ் அரிசி ஆலை, மானிப்பாய். 6082

### தேவை

சகல வசதிகளுடனும் அடங்கிய வீடு ஒன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுடலுக்குள் வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ளவும்: சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ், 30/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 6088

I. C. M. A. Courses at Percival Hall Chapel Street, Jaffna. November 1977 Exams

1. Foundation Stage Section A Applications Close 10-5-77. Enrolment 15-5-77.
2. Foundation Stage Section B & Professional Stage I Applications Close 29-5-77 Enrolment 1-6-77

Application Forms at -/50 cts adove address. Guidance: A. Somasundarampillai B. A. F. C. A, 95, Stanley Road, Jaffna. 6087



1973-ம் ஆண்டு 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டம் 283-ம் பிரிவின் கீழ்

### இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

சண்டிலிப்பாய், கல்வளை ரோட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதி மயில்வாகனம் கந்தையாவின் மரணசாதனம் எழுதப்படாத சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்.
இலக்கம்: 349.

சண்டிலிப்பாய், சண்டிலிப்பாய்மத்திசபாபதி மயில்வாகனம் கந்தையா கைம்பெண் மகேஸ்வரி.

விண்ணப்பகாரர்

மற்றும்

1. சண்டிலிப்பாய், கல்வளை ரோட்டைச் சேர்ந்த கந்தையா வாமதேவனும்
2. பாரியார் நல்லநாயகியும்
3. சண்டிலிப்பாய், சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த சண்முகம் பால சுப்பிரமணியமும்
4. பாரியார் நகுலநாயகியும்

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 19-04-1977 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததன் பேரில் 3-6-77 திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினலன்றி மேற்சொல்லப்பட்ட விண்ணப்பதாரி மேற்சொல்லப்பட்டவரின் கைம்பெண் என்ற முறையில் அவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய தத்துவப்பத்திரம் பெறுவதற்கு உரிமை உடையவர் எனவும் அவ்வண்ணம் அவருக்கு வழங்கப்படுமெனவும் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
19-04-1977. 6085


## சந்தேக நபர்கள் கைது

சங்கானை, புதன்

சங்கானை ப. நோ. கூ. சங்கங்களில் அண்மைக்காலத்தில் அடிக்கடி களவுகள் நடைபெற்றதன் காரணமாக சங்க நிர்வாகம் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் அவ்வக் கிளை காவலாளர்களும் வேறு சந்தேக நபர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

பொலிசாரின் கண்காணிப்பு, ரோந்து பலப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரவு நேரத்தில் ஈடுபட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் றியாலுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக சிலரை சண்டிலிப்பாயில் வைத்து கைது செய்துள்ளார். (க)

# மரணங்களைக்கூடக் கட்சிக் கண்ணுடன் நோக்கலாமா?

அன்புள்ள
திரு. ஆர். பரமேஸ்வரன்,

12-4-77 'ஈழநாடு' இதழில் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனி இயங்குவதிலுள்ள ஆபத்தினைப்பற்றி எழுதியிருந்தேன். அதற்கு தாங்கள் 22-4-77 'ஈழநாடு' இதழில் எழுதியிருந்த பதில் கட்டுரை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் நடவடிக்கைகளுக்கு விளக்கமளிப்பதற்குப் பதிலாக அதன் பலவீனங்களைக் கோடிட்டுக் காட்டும் ஒரு கட்டுரையாகவே இருந்தது. தமிழ் இளைஞர் பேரவையின் மீது நீங்கள் கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சியையும், தாழ்வு மனப்பான்மையையுமே தங்கள் கட்டுரை எடுத்துக்காட்டியதென்பதனை அக்கட்டுரையை வாசித்த அன்பர்கள் அனைவரும் புரிந்துகொண்டிருப்பர்.

1972ல் தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டபோது தமிழ் காங்கிரஸ் தமிழரசுக்கட்சியுடன் சம அந்தஸ்துடன் கூட்டணியில் இணைந்தது. இன விடுதலையில் பற்றுள்ள அனைவரையும் கூட்டணியில் சேருமாறு அழைப்புவிடுக்கப்பட்டது. அச்சமயம் அமரர் ஜீ. ஜீ. மலேஷியாவில் இருந்ததால் கூட்டணியின் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்ற முடியவில்லை. தாங்கள் குறிப்பிட்ட மற்றைய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் தங்கள் சொந்தக் காரணங்களுக்காக கூட்டணியில் சேர்ந்து தீவிரமாக இயங்கவில்லை. அதனை விட்டுவிட்டு ஏழு காங்கிரஸ் உறுப்பினர்கள் மட்டும் சேர்வதால் கூட்டணியாகிவிடுமா என்று நீங்கள்கேட்பது நகைப்பிற்கிடமானது.

தமிழரசு வாலிப முன்னணியினர் அனைவரும் தமிழ் இளைஞர் பேரவையில் சேர்ந்து உழைப்பதை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அதே போல் பல காங்கிரஸ் வாலிபர்களும் இளைஞர் பேரவையில் அங்கம் வகிக்கின்றனர். தமிழரசு வாலிபர் யார்? காங்கிரஸ் வாலிபர் யார்? என்று இனங்காண முடியாதளவுக்கு ஒற்றுமையுடன் செயலாற்றி வருகின்றனர். நிலைமை அப்படியிருக்கையில் காங்கிரஸ் இளைஞர்களுக்குப் பதவி வழங்கப்பட்டதாவென்று கேட்க இயக்கத்தில் சேராத உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? தமிழ்காங்கிரஸ் என்று கூட்டணியில் சேர்ந்ததோ அன்றே உங்களைப்போன்றோரும் கூட்டணியில் இணைந்திருக்க வேண்டும். அதைவிடுத்து இளைஞர் பேரவையினர் அழைக்குமளவுக்கு காத்திருந்து உங்களுக்குள்ள சம அந்தஸ்தைத் தாழ்த்திக் கொள்ளலாமா? இவ்வளவு காலமும் பேசாதிருந்துவிட்டு தேர்தல் நெருங்கும்போது காங்கிரஸ் வாலிபர்களைத் திரட்டுவதாகக் கூறிக்கொண்டு "எங்களுக்கு இவ்வளவுதொகுதிகள் வேண்டும்" என்று முறண்டு பிடிப்பதாலேயேவிடுதலை விரும்பிகள் காங்கிரஸ் வாலிப முன்னணியினரைச் சந்தேகக்கண்கொண்டு நோக்குகின்றனர்.

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி கலைக்கப்பட்டால் அவர்கள் நிச்சயம் இளைஞர் பேரவையில் சேராமல் வேறு கட்சிகளிலேயே இணைவார்கள் என்று கூறுகிறீர்கள். இதற்கு நீங்கள் காரணமெதனையும் கூறவில்லை. இதிலிருந்து இளைஞர் பேரவையின்மீது தங்களுக்குள்ள காழ்ப்புணர்ச்சி தெள்ளெனத் தெரிகிறது.

## விவாத மேடை

### த. காங்கிரசும் இ. தொ. காங்கிரசும்

தமிழ் காங்கிரசைக் கலைக்கும்படி கூறுபவர்கள் ஏன் இலங்கை தொழிலாளர் காங்கிரசைக் கலைக்கும்படி கூறவில்லை என்று கேட்டுள்ளீர்கள். தமிழரசுக்கட்சியும் காங்கிரசும் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளின் நலனிலேயே அக்கறை காண்பிக்கின்றன. ஆனால் இ. தொ. கா. மலைநாட்டில் வதியும் தமிழ் தோட்டத் தொழிலாளரின் நலனில் விசேட அக்கறை காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனலேயே இ. தொ. காவைக் கலைக்க வேண்டுமென்றுயாரும் கேட்கவில்லை. அதுபோலவே முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு இயங்குகிறது.

தனித்தனிக் கட்சிகளாக இயங்குவது தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு உகந்ததல்ல என்ற காரணத்தினலேயே தமிழரசு காங்கிரஸ் கட்சிகள் கலைக்கப்பட வேண்டுமென்ற கருத்து தோன்றியது. கூட்டணியின் அங்கீகாரமின்றி இக்கட்சிகளைக் கலைத்தாலேயொழிய, கட்சிகளைக்கலைக்க வேண்டுமென்ற கருத்து கூட்டணித் தீர்மானத்துக்கு விரோதமானதென்று கூறமுடியுமா?

தமிழ்க்காங்கிரஸ் விடுதலை இயக்கத்தில் வகித்த பங்கு பற்றி யாரும் கேள்வியெழுப்பவில்லை நீங்களே வீணாக குட்டையைக் கிளறுகிறீர்கள் எனினும் நீங்கள் பிரச்சினையை எழுப்புவதால் விளக்கம் அளிக்கிறேன். நீதிமன்றத்தில் சட்டத்தை மீறித் துண்டுப்பிரசுரம் விநியோகித்து சிறைசென்ற ஒரே ஒரு எம். பி. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான் என்று பெருமைப்படுகிறீர்கள். ஆனால் உண்மை என்னவெனில் மற்றைய எம். பி.க்கள் இதே சட்ட மறுப்பைச் செய்தபோது நீதிபதிகள் தண்டிக்கவில்லை என்பதாகும். தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்களின்போது இறந்தோருள் காங்கிரஸ் வாலிபரும் ஒருவர் என்று கூறுகிறீர்கள். இப்படியான மரணங்களைக்கூட கட்சிக்கண்ணோட்டத்துடன் நோக்கும் உங்களைப் போன்றோரால்தான் தமிழ்மக்களின் ஐக்கியத்துக்கு குந்தகம் ஏற்படுகிறது.

எந்தவொரு விடுதலை இயக்கமும் நன்கு ஆராய்ந்தே தனது போராட்டத் திட்டங்களை வகுக்கும். கூட்டணியின் போராட்டங்களின்போது இயக்கத்தில் சேர்ந்துழைத்த இளைஞர்கள் தியாகஞ் செய்வதற்கான சந்தர்ப்பத்தைப்பெற்றனர். இவ்வளவு காலமும் இயக்கத்தில் சேராதிருந்துவிட்டு இப்போது தியாகஞ் செய்வதற்கான சந்தர்ப்பம் தரப்படவில்லை என்கிறீர்கள். தியாகம் வீடு தேடிக் கொண்டு வந்து தரும் பொருளா என்ன? மற்றப்படி தொண்டர்கள் அனைவரும் கட்சிரீதியிலேயே தெரிவு செய்யப்பட்டார்கள் என்பது கடைந்தெடுத்த பொய் என்று இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த அனைவருக்கும் தெரியும்.

தேர்தல் உங்களது இலட்சியமில்லை என்றும், தேர்தலில் போட்டியிடாத நிலையிலும் கூட்டணியின் இலட்சியத்தினை அடைவதற்காக காங்கிரஸ் வாலிப முன்னணி தொடர்ந்து போராடுமென்றும் கூறுகிறீர்கள். சில தினங்களுக்கு முன்பு வரை தமிழ்க் காங்கிரசுக்குப் போதிய தொகுதிகள் வழங்கப்படாவிடில் "முக்கியமான" முடிவு எடுக்கப்படுமென்று பயமுறுத்தியது உங்கள் வாலிப முன்னணி. பின்னர் காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் தலையீட்டின் பேரிலேயேஇப்போது இப்படிக் கூறுகிறீர்கள் என்பதை மறுக்கவோ மறைக்கவோமுடியுமா?

ஆகவே இனியாவது எழுதும்போது நன்கு சிந்தித்து எழுதுங்கள். வீண் விதண்டாவாதங்களை எழுதி தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டாம். இனவிடுதலையில் உங்களுக்கு உண்மையிலேயே பற்றிருந்தால் கூட்டணியுடன் இணைந்து கொள்ளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

— பொ. கிருபானந்தன்

## படகோட்டி இல்லாத மரக்கலம் போலானேம்

அடடாவோ தமிழினத்தின் சாபக்கேடு!
அடுத்தடுத்துப் பலதலைவர் அகலு கின்ருர்;
திடமாக அணிதிரட்டி உரிமை வேட்கும்
திறமைமிகு திருச்செல்வம் ஜீ. ஜீ. போன
இடரோய்ந்து அடங்குவதன் முன்'செல் வா'வும்
ஏகிவிட்டார்; இலட்சியநல் விலக்கி லுய்க்கும்
படகோட்டி யில்லாத மரக்க லம்போல்
பாதைதடு மாறிநின்று பதறு கின்றேம்!

'ஈழத்துக் காந்தி' யென்று சொல்லயார்க்கும்
இனியவராய் இருந்(து) 'உரிமை யோடு யாமும்
வாழத்தான் வேண்டு'மெனக் கால்நூற் ருண்டாய்
வழிநடத்தி வந்தவரை எண்ப தாண்டு
காலத்துள் இழந்து விட்டோம்; அவரெ மக்குக்
காட்டியநன் னெறியினையே கைக்கொண் டெங்கள்
ஈழத்தமிழ்நாட்டு இலக்கை யெய்த
எல்லோரும் ஓரணியாய் இணைந்து ழைப்போம்!

—கவிஞர் 'சாரதா'

## புலமைப்பரிசில் நேர்முகப்பரீட்சை

அரியாலை, புதன்

சோவியத் ருஷ்யக் குடியரசு இலங்கை மாணவருக்கு 1977ம் ஆண்டு வழங்கவிருக்கும் புலமைப்பரிசில்களுக்கான நேர்முகப்பரீட்சை கடந்த 28-ந் திகதி தொடக்கம் கொழும்பு மலே வீதியிலுள்ள வித்தியா கந்தோரில் நடைபெறவிருக்கிறது.

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் 4 பாடங்களில் சித்தி பெற்ற பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள்பலர் வடமாகாணத்திலிருந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## காந்நியக் கருத்தரங்கு

மட்டுநகர், புதன்

அகிலஇலங்கை காந்திசேவா சங்கத்தின் பதுளை மாவட்ட சர்வோதயக் கருத்தரங்கு இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது. மட்டக்களப்புப் பிராந்தியக் கருத்தரங்கு, குருக்கள் மடத்திலும், பின்னர் தெரிவுசெய்யப்படும் வேறொரு இடத்திலும் நடைபெறும்.

மட்டக்களப்புக் காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் திரு. கதிர். பாரதிதாசன் சமீபத்தில் கொழும்பு சென்று இரத்மலானையிலுள்ள தலைமைச் செயலகத்தில் மேற்படி கருத்தரங்குக்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## இன்று பரீட்சை

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சை இன்று ஆரம்பமாகிறது.

இப்பரீட்சையில் சகல துறைகளிலும் 7 ஆயிரத்துக்கும்அதிகமான மாணவர்கள் தோற்றுகின்றனர். (இ)

## சுன்னுகம் சந்தையில் பொதுத்தராசு

சுன்னுகம், புதன்

சுன்னுகம் சந்தையில் பொதுத்தராசு இல்லாமல் விவசாயிகளின் விற்பனைப் பொருட்களும், பொதுமக்கள் அன்ருடம் வாங்கும் பொருட்களும் பிழையான தராசுகள் மூலமாக குறைத்து நிறுவை செய்யப்படுகின்றது என்ற மக்களின் நீண்டநாள் குறைபாட்டை நிவர்த்திசெய்யும் வண்ணமாக சுன்னுகம் பட்டணசபையினர் பொதுமக்கள் பாவனைக்கு வைப்பதற்குப் பெரியஅளவிலான மணிக் கூட்டுத்தராசு ஒன்று வாங்கியுள்ளார்கள். (அ)

# இரு மத்திய மந்திரிகளுக்கு சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ்

புதுடில்லி, மே. 4

மத்திய அமைச்சர்களான திரு. ஜோர்ஜ்பெர்ணண்டஸுக்கும், திரு. மது தண்டவதேக்கும் டில்லி சுப்ரீம் கோர்ட் நோட்டிஸ் பிறப்பித்துள்ளது.

மத்திய பிரதேஷை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் உட்பட இருவர் மேற்படி இரு அமைச்சர்களினதும் பதவிப் பிரமாணம் செல்லுபடியாகாது எனக்கூறி சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனு ஒன்றினையடுத்தே இந்த நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இம்மனுவை ஏன் விவாதத்திற்கு அனுமதிக்கக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு தகவல் தொடர்புகள் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்ணண்டஸ், ரயில்வே அமைச்சர் திரு. தண்டவதே ஆகியஇருவரையும் சுப்ரீம்கோர்ட் கேட்டுள்ளது. (உ-இ)

## கட்சிமாறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

புதுடில்லி, மே. 7

''கட்சிவிட்டு கட்சிதாவுவோருக்கு எதிராக புதிய சட்டம் ஒன்றினை அரசாங்கம் நிறைவேற்ற விருக்கிறது'' என பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் அறிவித்துள்ளார்.

இன்று ஆமதாபாத்தில் நிருபர்கள் மத்தியில் பேசியஅவர் இவ் வறிவிப்பை விடுத்தார்.

''காங்கிரஸ் கட்சி பிளவுபடுவதைநான் விரும்பவில்லை'' என்று கூறிய பிரதமர் ''இருகட்சி ஆட்சி முறையை நான் பெரிதும்விரும்புகிறேன்'' என்றார்.

5 வருடங்களுக்குள் தீண்டாமையை முற்றாக ஒழித்திட அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் பிரதமர் சொன்னார். (உ)

## பேசிக்கொண்டிருக்க ஜே.பிக்கு சத்திர சிகிச்சை

வாஷிங்டன், மே 4

அமெரிக்காவில்தங்கியிருந்து சிகிச்சைபெறும் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயணுக்கு நேற்று இரண்டாவது தடவையாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

அவருக்குப் பொருத்தப்பட்டுள்ள செயற்கை சிறுநீரகத்தை இயங்கச்செய்வதற்காக அவரது வலது முன்கையில் செயற்கைநாளம் ஒன்று இச் சத்திரசிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

சத்திரசிகிச்சையின் பின் அவரின் உடல்நிலை திருப்தியாக உள்ளது என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

### ஆப்ரேஷனின்போது டாக்டர்களுடன் கதைத்தார்

இந்தச்சத்திரசிகிச்சை நடைபெற்ற சமயம் ஜெயப்பிரகாஷர் சுயநினைவுடன் டாக்டர்களுடன்கதைத்துக்கொண்டிருந்தார் என்றும் 48 மணித்தியாலங்கள் இவர் டாக்டர்களின் கண்காணிப்பில் இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

சுமார் 2 மணி நேரம் இந்த சத்திரசிகிச்சை நீடித்தது. (இ)

## ஜனதா கட்சியின் புதிய காரியக் கமிட்டி

புதுடில்லி, மே. 4

ஜனதா கட்சி புதிய காரியக் கமிட்டியின் 30 உறுப்பினர்கள் அடங்கிய பட்டியலை கட்சியின் தலைவர் திரு. சந்திரசேகர் இன்று வெளியிட்டார்.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் உட்பட மத்திய அமைச்சர்கள் அறுவர் இதில் இடம் பெறுகின்றனர்.

ஜனநாயக காங்கிரஸ் முறைப்படி ஜனதா கட்சியுடன் இணைந்துகொண்ட பின்னர் மேலும் 10 உறுப்பினர்கள் காரியக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (உ)

## குஜராத்தில் மொரார்ஜி சுற்றுப் பயணம்

### சொந்த மாநிலத்தில் அமோக வரவேற்பு

புதுடில்லி, மே 4

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் பிரதமராகப் பதவியேற்றபின் முதல் தடவையாக தமது சொந்த மாநிலமான குஜராத்திற்கு சென்றபோது அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அகமதாபாத் விமானநிலையத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பிரதமரை வரவேற்றனர்.

குஜராத்தில் இரண்டுநாள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு பிரதமர் நேற்று அங்கு சென்றார்.

காங்கிரஸ்கட்சி படுதோல்வியடைந்த மாநிலங்களிலுள்ள சட்டசபைகளைக் கலைத்தது அரசியல்சாசனத்திற்கு முரணனது என்று காங்கிரஸ்கட்சியினர் கூறிவருகின்றனர், அந்த மாநிலங்களில் ஆட்சி ஒழுங்காக நடைபெறாத காரணத்தினாலேயே அவை கலைக்கப்பட்டன என்றும் பிரதமர் குஜராத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

19 மாதங்களாக அவசர காலநிலையின் கீழ் அரசியல் தலைவர்களை சிறையில்அடைத்துக் கொடுமைப்படுத்திய காங்கிரஸ் அரசு இப்போது அரசியல் சாஸன உரிமை பற்றிப் பேசுவது விந்தையாக இருக்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (இ)

## ரூ. 6 கோடி பேதைவஸ்து மீட்பு

புதுடில்லி, மே 4

ஒரிஸ்ஸா மாநிலத்தில் பஸ் ஒன்றில் சென்ற வெளிநாட்டுப் பிரயாணிகளிடமிருந்து 6 கோடி ரூபா பெறுமதியான போதை வஸ்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

56 டின்களில் இந்த வஸ்து இருக்கக் காணப் பட்டதாம்.

இதை எடுத்துவந்ததாகக் கூறப்படும் வெளிநாட்டினர் தப்பி விட்டதாகக் கூறப்படுகிறது. (இ)

## அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வியா.

கண்ணாடிவகைகளைஒருசாராருக்குத் தொகையாக வழங்குவதை நிறுத்தி, உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக்கமைய அவர்களுடைய வரைபடங்களுக்காக ஓரளவு விநியோகிக்கும்படி யாழ். சனசமூகநிலைய சமாஜச் செயலாளரும், ஊரதிவு சனசமூகநிலையத் தலைவருமான திரு. எஸ். கே. சண்முகலிங்கம் வீடமைப்பு அமைச்சர் க. செ. குமாரசூரியரிடம் கோரியுள்ளார்.

அமைச்சர் குமாரசூரியரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அண்மையில் நாட்டில் கண்ணாடிவகைகளுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது. சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் இலங்கை அரசாங்கத்தின் ஓடர்களை சீனா அரசாங்கம் வழங்குவதில் தாமதம் காரணமாக, வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியானவை பற்றாக்குறையாயுள்ளன. இதனால் யாழ், கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனத்துக்கு வரும் கண்ணாடிவகைகள் போதுமானவையல்ல. இந்நிலையில் வீடுகட்டுபவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். (கே-க)

## ரூபா 50 லட்சம் லொறி உதிரிப்பாகம் இறக்குமதி

கொழும்பு, புதன்

50 லட்சம் ரூபா பெறுமதியான லொறி உதிரிப்பாகங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்ய அரசு தீர்மானித்துள்ளது. (இ)

## 4 மாதங்களாக அதிபர் இல்லை

சங்கானை, புதன்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் கடந்த நான்கு மாதங்களாக அதிபரின்றி இயங்கிவருகின்றது.

இங்கு கடமையாற்றிய அதிபர் திரு எஸ். நவரத்தினம் இடமாற்றம் பெற்று நான்கு மாதங்களாகியும் இங்கு எவரும் நியமனம் பெறவில்லை என பெற்றார் புகார் தெரிவிக்கின்றனர். (இ)

## பாக். அரசியல் நெருக்கடி தீரும் அறிகுறி

இஸ்லாமாபாத், மே 4

பாகிஸ்தான் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாக். எதிர்க்கட்சிகூட்டணியினர் இதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

தமது புதிய திட்டத்துடன் எதிர்க்கட்சி கூட்டணியினர் இன்று அல்லது நாளை பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோவைச் சந்திப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூட்டோ பதவி விலகவேண்டும், மீண்டும் தேர்தல் நடைபெறவேண்டும், புதிய தேர்தல் கமிஷன் நியமிக்கப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளும் எதிர்க் கட்சியினரின் புதிய திட்டத்தில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளையில் எதிர்க்கட்சியினர் கோரிக்கையின்படி புதிய தேர்தலை நடத்த பிரதமர் பூட்டோ சம்மதம் தெரிவித்துள்ளார். (இ)

## சங்கானைப் பகுதியில் மின்விளக்குகள் திருட்டு

சங்கானை, புதன்

சண்டிலிப்பாய், சங்கானை போன்ற இடங்களில் வீடுகள், கோவில்கள் ஆகியவற்றில் பல்புகள் திருடப்பட்டு வருகின்றன.

அண்மையில் சண்டிலிப்பாயில் வீடொன்றில் உரிமையாளர் வெளியிடம் சென்றிருந்த சமயம் திருடர் பூட்டப்பட்ட வீட்டினுட்புகுந்து அங்கு இணைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த மின் பல்புகளை களவாடிச் சென்றுள்ளனர்.

சங்கானையில் வேல்வில் முருகமூர்த்தி கோவிலில் ரியூப் பல்புகளையும் களவாடிச் சென்றுள்ளனர். இதுபற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## சங்கானைச் சந்தையில் ஆயுத கோஷ்டி அட்டகாசம்

சங்கானை, புதன்

சங்கானைச் சந்தையில் துப்பாக்கியுடன் புகுந்த ஒருவர் அங்கு மரக்கறி விற்பனைசெய்து கொண்டிருந்த பெண்மணியைப் பயமுறுத்தி அவருடைய விற்பனைப் பொருட்களைச் சேதப்படுத்தி, இ. போ. ச. ஊழியர் ஒருவரையும் பயமுறுத்தினராம். இதனால் அங்கு காய்கறி வாங்க வந்தவர்கள் பீதியடைந்து அங்குமிங்குமாக ஓட்டம் பிடித்தனர்.

செய்தியறிந்த மரக்கறி விற்பனையாளரான பெண்மணியின் உறவினர் பயங்கர ஆயுதங்களுடன் சந்தைக்கு வந்து சம்பந்தப்பட்டவரைத் தேடியதுடன், சம்பந்தப்பட்ட குழப்பம் விளைவித்த நபரின் மற்றும் ஓர் உறவினரான வியாபாரியான பெண்ணின் காய்கறிகளைச் சேதப்படுத்திச் சென்றனராம்.

கடந்த திங்கட்கிழமை சுமார் பத்துமணியளவில் நிகழ்ந்த இச்சம்பவத்தினால் சந்தைக்கு வந்தவர்கள் பீதியடைந்து, உயிர் தப்பினால் போதுமென ஓட்டமும் நடையுமாக வீடு சென்றனர். சந்தை சிறிது நேரம் எவருமின்றி வெறிச்சோடிக்கிடந்தது.

இது சம்பவம்பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. ஒருவர் சந்தேகத்தின்மீது விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் றியால்டீன் சந்தை மைதானத்திற்கு பொலிஸ் பந்தோபஸ்தைப் பலப்படுத்தியுள்ளார். (இ)

## ஆயுர்வேத ஆணையாளரைத் தூது கோஷ்டி சந்தித்தது

யாழ்ப்பாணம், வியா

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கை தொடர்பாக இக்கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் டாக்டர் அருளானந்தம் தலைமையிலான தூதுகோஷ்டி ஒன்று கொழும்பு சென்று ஆயுர்வேத ஆணையாளர் திரு. டி. கே. திஸநாயக்காவைச் சந்தித்து மாணவர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தினார்கள்.

இத்தூதுக் குழுவில் கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் அ. கெங்காதரன், அதிபர் டாக்டர் ஏ. வி. இராசரெத்தினம், மாணவர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் சென்றிருந்தனர்.

கடந்த மாதம் 28ம் திகதி முதல் இக்கல்லூரி மாணவர்கள் தம்மை அரசு பொறுப்பேற்கவேண்டுமென்றும், சித்த வைத்தியப் பிரிவிற்கென கைதடியில் கட்டப்பட்டு, கடந்த இரு வருடங்களாகப் பூட்டப்பட்டிருக்கும் கட்டிடத்தில் இக்கல்லூரியை நடத்த வேண்டும் என்றும் கோரி மாணவர்கள் கல்லூரியைத் தொடர்ந்து பகிஷ்கரித்துவருவது தெரிந்ததே.

யாழ் அரசியல் அதிகாரி திரு. அருளம்பலம் தலைமையில் சென்ற தூதுகோஷ்டி சுகாதார அமைச்சர் திருமதி சிவா. ஒபயசேகராவைச் சந்தித்து மாணவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பிரதமருக்கு ஐ.நா. உணவுஸ்தாபனம் கௌரவம்

கொழும்பு, புதன்

பிரதமர் திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனம் விசேஷ பதக்கம் ஒன்றினை அளித்துக் கௌரவித்துள்ளது.

உணவு அபிவிருத்தித் திட்டத்தில் பிரதமர் காட்டிவரும் தீவிர ஈடுபாட்டினை பாராட்டும் வகையில் இப்பதக்கத்தை பிரதமருக்கு நேரில் அளிப்பதற்கென மேற்படி ஸ்தாபனத்தின் தலைவர் திரு. சமூவா இம்மாதம் 11-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பெண் குலத்தின் மேம்பாட்டிற்காகவும் உழைப்பவர் திருமதி பண்டாரநாயக்கா என்று இந்த ஸ்தாபனம் பாராட்டியுள்ளது. (உ)

மணிவாக்கு

தனது ஜீவியகாலத்தில் ஒவ்வொருகணமும் முழு விழிப்புடனிருந்தாலன்றி ஒருவர் சத்தியத்தைக்காணமுடியாது.
—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## வானொலி அஞ்சல்

தந்தை செல்வநாயகத்தின் இறுதியாத்திரை, இறுதிக் கிரியை நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை அஞ்சல்செய்யுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் இது நேரடி அஞ்சலாக இருக்கமாட்டாதென்றும் அன்றிரவு ஒன்பதரை மணி முதல் பத்தரை மணி வரை தொகுத்து ஒலிபரப்பப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

அன்றிரவு ஒன்பதேகால் மணியளவில் மூவருடைய இரங்கலுரையில் சில பகுதிகள் ஒலிபரப்பப்பட்டன.

அன்று நடந்த இறுதியஞ்சலிக் கூட்டத்தில் இருவர் நிகழ்த்திய உரையின் சில பகுதிகளும் தகவல் ஒலிபரப்புப் பிரதியமைச்சரின் இரங்கல் செய்தியும் ஒலிபரப்பப்பட்டன.

அடுத்தநாள் இரவிலும் இறுதியஞ்சலிக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட சிலரின் உரைகளின் சுருக்கம் ஒலிபரப்பப்பட்டது.

இலங்கையின் சமீபகாலச் சரித்திரத்தில் தமிழ்த்தலைவர் ஒருவரின் மறைவுக்கு அரசாங்கம் அளித்த முக்கியத்துவமும் கௌரவமும் இதைப்போல் எதுவும் இருந்ததில்லை என்பது உண்மையே.

வானொலியில் நிகழ்ச்சிகளைக்கூட இரத்துச்செய்துவிட்டு பக்திப்பாடல்களை ஒலிபரப்பியதும், இறுதியாத்திரை, இறுதிக்கிரியை நிகழ்ச்சிகளை அஞ்சல்செய்ய முன்வந்ததும், திரைப்படப் பிரிவினரை அனுப்பி இறுதியாத்திரையைப் படம் எடுக்க ஏற்பாடு செய்ததும் பாராட்டுக்குரியது.

ஆனால் வானொலியில்அஞ்சல் செய்வதற்காகக் கொழும்பிலிருந்து ஒரு மோட்டார் வானில் நான்கு ஐந்து ஊழியர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து காலைமுதல்இரவுவரை இறுதி ஊர்வலத்திலிருந்து நேர்முகவர்ணனை செய்தும் வானொலியில் இறுதிஊர்வலம் பற்றி எதுவும் ஒலிபரப்பாகவில்லை.

இரங்கலுரையின் சில பகுதிகளைத்தான் ஒலிபரப்புவதென்றால் வீண் செலவில்லாமல் ஒரு ஊழியர்மட்டும் இங்குவந்து ஒலிப்பதிவு செய்து திரும்பியிருக்கலாமே!

எல்லா ஏற்பாடுகளும் செய்தபின் இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது?

இறுதி யாத்திரைப் படம் பிடிக்கப்பட்டது; அதுவும் வெளிவராத படமாகவே இருந்துவிடுமா?

மண்டைதீவில் உப அஞ்சல் நிலையம் அமைத்தும் சினிமாப்பாட்டையும்விளம்பரங்களையும்தான் பகல் முழுவதும் யாழ்ப்பாணப் பகுதிமக்கள் கேட்கவேண்டுமென்று விதிக்கப்பட்ட தண்டனை போதாதா?

வடபகுதி மக்கள் பயன்படக் கூடியதாக இந்த உப அஞ்சல் நிலையத்தைஉபயோகிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

# இந்திரா ஆட்சியை மாற்றிய பீஹார் இயக்கம்

இரண்டு வருடங்களுக்கு முன்பாக அதாவது 1975 ஏப்ரல்மாதம் சென்னை நகருக்குச் சென்றிருந்தேன். என் மதிப்பிற்குரிய பழைய நண்பரான 'தினமணி' ஆசிரியர் ஏ. என். சிவராமன் அவர்களைக் கண்டேன். சொந்தவிஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பின்னர் தாம்எழுதிய ''பீஹார் இயக்கம்'' என்ற புத்தகத்தின் பிரதியை அன்பளிப்பாக எனக்குத் தந்தார்.

'தினமணி' பத்திரிகையில் தொடர்ந்து இந்த இயக்கத்தைப்பற்றித் தாம் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து (3-1-75 முதல்22-2-75 வரை) ''பீஹார் இயக்கம்'' ஜயப்பிரகாஷ் நாராயண் தலைமைத் தத்துவங்கள், குறிக்கோள்'' என்ற தலைப்புடன் இந்நூலை வெளியிட்டதாகவும் 29 ஆயிரம் பிரதிகளுக்கு ஆர்டர்கள் முன்பணமாகக் கிடைத்துவிட்டதாகவும் தெரிவித்தார். விலை ரூபா 1-50.பக்கங்கள்(பெரிது) 135. பீகாரில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் ஜெயபிரகாஷ் பேசிக்கொண்டிருப்பதாக மேலட்டையில் முகப்புப் படம்.

### கே. பி. ஹரன்

பீஹார் இயக்கத்தைப்பற்றியும் அதை நடத்திவைத்த ஜெயப்பிரகாஷ நாராயண் குறித்தும் அரைகுறையாக ஏதோ சில செய்திகளைப் படித்துள்ளேன். அது மாணவர்களின் பலாத்காரக்கிளர்ச்சி என்றும், ஜனநாயக ஆட்சிக்கு மாறுபட்டதென்றும் அதைஇந்திராகாந்தியின் ஆட்சி அடக்கிவிட்டதாகவும் கிளர்ச்சியால் குஜராத்திலும் பீஹாரிலும் சட்டசபைகள் கலைக்கப்பட்டதாகவும் சிறிது அறிந்திருந்தேன்.

ஜெயப்பிரகரஷ் நாராயண் மீது எனக்கு பல்லாண்டுகளாகப் பெருமதிப்புண்டு. நாட்டுக்காக உயிரையும் தியாகம் செய்யத் துணிந்தவர், அஞ்சா நெஞ்சினர், செயல்வீரர். தம்மையே ஜீவன்தானமாக சர்வோதயத் தலைவரான ஆசார்ய வினோபாபாவேயிடம் ஒப்புவித்தவர். அஹிம்ஸா வீரரான அவர் ஏன் இந்த பலாத்காரக் கிளர்ச்சியில் ஈடுபட்டு நடத்தவேண்டுமென்று எனக்குப் புரியவில்லை.

பல பெரும் சோதனைகளிலிருந்து நாட்டைமீட்டு, கொள்ளைலாபப் பேர்வழிகளை அடக்கிவந்த பிரதமர் இந்திரா காந்திக்கு மாறாக இவர் ஏன் கிளர்ச்சி செய்கிறார்? சர்வோதயத் தலைவரான ஆசார்ய விநோபாவே பீஹார் இயக்கத்தை ஆதரிக்கிறாரா? என்பதும் தெரியவில்லை. எவ்வளவோ இயக்கம் அடக்கப்பட்டுவிட்டதால், அதைப்பற்றி விசேஷமாக கவனிக்காமல் இருந்துவிட்டேன். என்றாலும் சிவராம்ஜி அவர்கள் அளித்த அந்நூலை பிறகு உற்சாகமாகப் படிக்கலாம் என்று பெற்றுக்கொண்டேன். வருடங்கள் இரண்டாகியும் அப் புத்தகத்தைப்படிக்கவேஇல்லை.

பின்னர் இந்தியலோக்சபை கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தலில் இந்திராவின் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. ஜனதாக் கட்சியை ஜெயப்பிரகாஷ்நாராயண் உருவாக்கி, தேர்தலில் அமோகமான வெற்றிபெற்றதைக்கண்டதும், அவர்மீதும் அவரது பீஹார் இயக்கத்தின்மீதும் எனக்குப் புதுமதிப்பு ஏற்பட்டது. அவரது இயக்கத்தின் உண்மைநோக்கத்தை அறிந்துகொள்ள ஆவலடைந்தேன். தினமணி ஆசிரியர் தந்த புத்தகத்தின் நினைப்பு வந்தது: படித்தேன். அடிப்படையான பல உண்மை விபரங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

ஜனதா கட்சி அரசாங்கத்தின் உயிர்நாடியாகவும் இன்று இந்தியாவின் முடிசூடாமன்னராகவும் உள்ள ஜெயப்பிரகாஷ் நாராயண்பற்றியும் அவர் நடத்திய பீஹார் இயக்கம் தான் இந்தியாவின் ஆட்சியை மாற்றி புதிய ஆட்சியைத் தோற்றுவித்ததென்பதையும் அறிந்ததும், இந்த விவரங்களை 'ஈழநாடு' வாசக அன்பர்களுக்கும் தெரிவிக்க மனம் உந்தியது.

இந்திய அரசியல் குறித்து அதிக ஆர்வம்காட்டிவரும் 'ஈழநாடு' அன்பர்கள் இதை ஆவலுடன்வரவேற்பார்களென்றே நம்புகிறேன்.

கல்வி டிப்ளோமா

## விடைத்தாள்களைத் திருத்த விரிவுரையாளர்கள் மறுப்பு

### துணைவேந்தர் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, புதன்

அண்மையில் நடைபெற்ற கல்வி டிப்ளோமா பரீட்சைகளின் விடைத்தாள்களை திருத்துவதற்கு டிப்ளோமா தமிழ் விரிவுரையாளர்கள் அனைவரும் ஏகமனதாக மறுத்துவிட்டார்கள். இப்பரீட்சை வினத்தாழ்களின் மதிப்பீட்டிலும் இவர்கள் பங்குபற்றவில்லை. பரீட்சை மேற்பார்வையும் இவர்கள் செய்யவில்லை.

இப்பரீட்சைபற்றி அண்மையில் இலங்கைப் பல்கலைக் கழக செனட் அகத்தில் உபவேந்தர், கொழும்பு வளாக மனிதப்பண்பியல் துறைத்தலைவர் திரு. ப. சந்திரசேகரம், பேராசிரியர் ச. முத்துலிங்கம், விரிவுரையாளர்கள் வ. ஆறுமுகம், சின்னத்தம்பி ஆகியோரைக்கொண்ட குழு ஆராய்ந்தபோது அண்மையில் நடைபெற்ற பரீட்சை வினத்தாள்களை திருத்தவேண்டும் என்றும், அடுத்த பரீட்சைக்கான வினத்தாள்களை தயாரிக்கவேண்டுமென்றும் விரிவுரையாளர்கள் கோரப்பட்டனர்.

இதுதொடர்பாக தற்காலிக கல்விச்செயலாளர் திரு. பாஸ்கரலிங்கமும் திரு. சந்திரசேகரத்தையும் திரு. முத்துலிங்கத்தையும் தொடர்பு கொண்டு பேசியிருந்தார்.

அண்மையில் தரப்படுத்தல் செய்யப்பட்டு வெளியாகிய முடிவுகள் மீள ஆய்வு செய்யப்படாதவரை தாம் இப்பரீட்சையில் எவ்விதத்திலும் பங்குபற்ற முடியாதென விரிவுரையாளர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த ஆண்டு பரீட்சை முடிவுகளில் தரப்படுத்தல் நடைபெற்றதைத் தொடர்ந்து இக்குழுவிலிருந்து இவர்கள் ராஜினுமாச் செய்துள்ளது தெரிந்ததே. (ம)

......

### வரி அறவிட நடவடிக்கை

சங்கானை, புதன்

சங்கானைப் பட்டினசபை எல்லைக்குள் இதுவரை காலமும் ஆதன வரியை ஐம்பது வருட வருமானமுள்ள ஆதனங்களுக்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்குமே மதிப்பீட்டிற்கிணங்க வரி வசூலித்து வந்தது.

தற்பொழுது சபையில் நடத்தப்பட்ட கணக்காளர் ஆய்வு உத்தரவுப்படி பத்து வருட வருமானம் பெறக்கூடியதற்கும் அதற்கு மேற்பட்ட வருமானமுடைய ஆதனத்திற்கும் வரி அறவிட பட்டினசபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் 7 வீதமாக இருந்த அறவீடு தற்பொழுது 8 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### கோண்டாவில் சிவகாமி அம்பாள் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோவில் சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக் கிழமை காலை நடைபெறுகிறது.

பிரதிஷ்டாகுரு பிரம்மஸ்ரீ சோ. குமாரசாமிக் குருக்கள் தலைமையில் இக்கும்பாபிஷேகம் நடைபெறும். (ஈ)

### கோப்பாயில்

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகமும் இன்று நடைபெறுகிறது.

சோழமன்னர் காலத்தை அடுத்துப் பழமை மிக்கதும் வெள்ளெருகம் செடிகள் மத்தியில் பண்ணைத் தொழிலாளர்களினுல் முதன்முதல் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டு மிகவும் பழமையும் புதுமையும் நிறைந்ததுமான பிள்ளையார் கோவிலான கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயம் 50,000 ரூபா செலவில் கர்ப்பக்கிருகம் துவிதாவிமானம் என்பன விளங்க புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளதாக சிவஸ்ரீ நீ. சச்சிதேஸ்வரக் குருக்கள் இவ் ஆலய வரலாறுபற்றி எழுதியுள்ளார்.

### மஸ்கெலியாவில்

மஸ்கெலியா ஸ்ரீவள்ளி நாயகி-தெய்வநாயகி சமேத அருள்மிகு ஸ்ரீ ஷண்முகநாத சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 6ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

அகில இலங்கை குருமார் தலைவரும் இந்துசமய பீடாதிபதி பிரதிஷ்டாபூஷணமுமான சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் இவ்வைபவம் நிகழும். (அ)

### ஊரைதீவு கி. அ. சங்கம்

புங்குடுதீவு, புதன்

ஊரைதீவுக் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஊர்காவற்றுறைத் தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் எஸ். கே. மகேந்திரன் ஐந்தாவது வருடமும் சங்கத்தலைவராக ஏகமனதாத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காப்பாளராக திருவாளர்கள் க. பொ. இரத்தினம் எம். பி., மு. சுப்பிரமணியம் (வேலணைப்பிரிவு உதவி அரசாங்க அதிபர்), ஆசிரியர்கள் சி. நா. பாலசிங்கம், வித்துவான் இ. க. கணபதிப்பிள்ளை, செ. இலகுப்பிள்ளை, இ. குலசேகரம்பிள்ளை, க. சோமாஸ்கந்தன் ஆகியோரும், உபதலைவர்களாக க. தியாகராசா ஆசிரியர், செ. தர்மலிங்கம் ஆகியோரும் செயலாளராக ஊரைதீவு உபதபாலதிபர் வே. சுப்பிரமணியமும், பொருளாளராக புங்குடுதீவு மகாவித்தியாலய அலுவலர் ம. பாலசிங்கமும், உபசெயலாளராக வை. கிருஷ்ணபிள்ளையும், எண்பார்வையாளராக இ. தம்பிஐயாவும் தெரிவாகினர். செயற்குழு உறுப்பினர்களாக சு. சந்திரன், செ. சோமசுந்தரம், ஐ. குலேந்திரன், கா. கந்தசாமி, பா வரதராசா, வே. கனகசபை, இ. பேரம்பலம், திருமதிகள் க. தவமணிதேவி, தி. அன்னலட்சுமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டர். (அ)

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

எழுவைதீவு சைவ பரிபாலன சபையின் வெளியூர் வாழுநர் கிளையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: ஏ. தருமலிங்கம், உபதலைவர்: அ. தியாகராசா, செயலாளர்: ஐ. ஆ. இராமசாமி, உபசெயலாளர்: பொ. சுந்தரலிங்கம், பொருளாளர்: செ. மா. பரமலிங்கம், உறுப்பினர்கள்: கி. குமாரசாமி, கி. சுந்தரலிங்கம், வி. சிவசம்பு, செல்வி சோ. இந்திராதேவி. (ஆ)

### 'நண்பர் நயினர்'

கடந்த நான்கு ஆண்டுகளுக்குமுன் காலஞ்சென்ற திரு. நயினர் (க.வே. இரத்தினசபாபதி)எனது நீண்டகாலநண்பர். அவரது நினைவுதினம் இன்று;

அவர் ஈழத்தின் புகழ்பெற்ற கவிஞராக விளங்கிய வசாவிளான் 'ஆசுகவி'கல்லடிவேலுப்பிள்ளையின் இளைய புதல்வராவார்.

அவர் இலங்கை இராணுவத்திலே லெப்டினன்டாகவும் பின்பு அரசினர் பால்விநியோகத்திட்ட மாவட்டமேற்பார்வையாளராகவும் பணிபுரிந்தார்.

புகழ்பெற்ற ஒரு குடும்பத்திலே பிறந்திருந்தும் சிறந்த கல்வியறிவைப் பெற்றிருந்தும் திரு. நயினர் மமதையற்ற ஒரு மனிதராகவே திகழ்ந்தார்.

ஆங்கில மொழியிலே வசீகரமாகப் பேசவும் எழுதவும் வல்லவரும் நல்லதொரு சிந்தனையாளருமான திரு. நயினர் நேசம் மிக்க நெஞ்சோடும் புன்னகை பூத்தமுகத்தோடும் வாழ்ந்தார். அந்த உத்தம புருஷனின் நினைவு என்றும் எம்நெஞ்சைவிட்டு நீங்காது

— வி. தர்மலிங்கம் எம்.பி
உடுவில்

...—

### யாருடையது?

யாழ் பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட மானிப்பாய்ப் பகுதி கடையைச் சேர்ந்த நான்கு கூப்பன் புத்தகங்களை யாழ். சுப்பிரமணியம் ஸ்ரோர்ஸ் சுப்பிரமணியம் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## செல்வா இறுதி அஞ்சலியின்போது வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து

# அமைச்சர் ரத்நாயகாவிடம் பண்டிதர் கா. பொ. கையளித்த மகஜர் என்ன?

— கா. யோகநாதன் —

வியாழக்கிழமைகாலை பிரதமரும், அமைச்சர்களும் மூதறிஞர் செல்வாவுக்கு அஞ்சலி செலுத்துவார்கள் என்ற தகவல் கிடைத்தது. மக்களும் காலை 8 மணிமுதலே வீரசிங்கம் மண்டபத்தை முற்றுகையிட ஆரம்பித்தனர்

அன்றுதான் கிழக்குமாகாண கூட்டணித் தலைவர்களும், கொழும்பு, மலைநாடு மற்றும் பகுதிகளிலிருந்தும் கூட்டணி ஆதரவாளர்கள் வந்து குவிந்தனர்.

### கிழக்கிலங்கை கொண்டுசெல்ல முயற்சி

கவிஞர் காசிஆனந்தன், திரு. பூ. கணேசலிங்கம், திரு சாம்பசிவமூர்த்தி ஆகியோருடன் அன்று அதிகாலை 3 மணிக்கு வந்து சேர்ந்தார். மூதறிஞரின் பூதவுடலைக் கிழக்குமாகாணத்திற்குக் கொண்டுவரவேண்டுமென மட்டுநகர் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதுபற்றிக் கூட்டணித் தலைவர்களுடன்நேரில்பேசி ஒழுங்கு செய்வதற்கே கவிஞர் வந்திருந்தார். இதேபோன்று மட்டுநகர் எம்.பி. திரு. செ. இராசதுரை, திருமலை எம்.பி. திரு. ப. நேமிநாதன், மூதூர் எம்.பி. திரு. தங்கத்துரை, திருமலைக் கூட்டணி அபேட்சகர் திரு. சம்பந்தர் ஆகியோரும் மூதறிஞரின் பூதவுடலை மட்டக்களப்பு, திருகோணமலைக்குக் கொண்டுசெல்வதுபற்றிக் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பிரதமரும், அமைச்சர்களும் வந்து திரும்பும் வரை மூதறிஞரின் பூதவுடலைக் கிழக்கு மாகாணம் கொண்டுசெல்வதுபற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

பிரதமர், அமைச்சர்கள் வருகையால் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. மண்டபத்திற்குள் கூட்டணி எம்.பி.க்கள், பிரமுகர்களின்உறவினர்களும், நண்பர்களும் இளைஞர்பேரவை அமைப்பாளர்களும், உறுப்பினர்களுமாக காலை 8 மணிக்கே மண்டபம் நிரம்பி வழிந்தது. இதேசமயம், வழக்கம்போல், சாதாரணமக்கள் கியூவில் நின்று அமைதியாகவந்து மூதறிஞருக்கு அஞ்சலிசெலுத்திக் கொண்டிருந்தனர்.

### கைகூப்பி வணங்கினர்

பலர் கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர். மற்றும்பலர் துக்கத்தை அடக்கமுடியாமல் கைகளால் வாயைப்பொத்தி விம்மிக் கொண்டிருந்தனர். பலர் கை கூப்பி வணங்கியபடியே அஞ்சலி செலுத்தினர். கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள், கர்ப்பிணிப்பெண்கள், நடக்கமுடியாத வயோதிபத் தாய்மார்கள் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். போலியோவினால் நடக்கும் சக்தியை இழந்த ஒரு சிறுமி தடிகளின் உதவியுடன் தனது தகப்பனை அணைத்தவாறு வந்து அஞ்சலி செலுத்தினர். சாதாரண ஏழைத் தொழிலாளிகள், விவசாயிகள், அன்றாடம் சீவியத்திற்காக உழைக்கும் மக்களும் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். இரு கண்களும் தெரியாத ஒருவரும் தமது மகளுடன் வந்து மூதறிஞர் தந்தைக்கருகில் வந்து நின்று கைகூப்பி வணங்கியபின் அமைதியாகச் சென்றார்.

மூதறிஞர் செல்வாவின் பூதவுடல்வைக்கப்பட்டிருந்த மலர் மேடைக்கு வலதுபக்கத்தில் முதல்வரிசையில், கவிஞர் காசி ஆனந்தனும் அருகில் மட்டுநகர் எம். பி. திரு. செ. இராசதுரையும் அமர்ந்திருந்தனர். அவருக்கு அருகில் பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம், அப்பால் பண்டிதர் கா.பொ. இரத்தினம் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

மலர்மேடைக்கு சமீபத்திலுள்ள ஆசனத்தில் திருமதி செல்வநாயகம், மூதறிஞர் செல்வாவின் சகோதரர், திருமதி சந்திரகாசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், செல்வி அம்பலம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அருகில் திரு. சந்திரகாசன், மாவை சேனாதிராசா ஆகியோர்நின்று கொண்டிருந்தனர்.

காசிஆனந்தனுக்குப் பின்வரிசையில், வண்ணை ஆனந்தன், பொன் சத்தியசீலன் மற்றும் சிறைமீண்ட இளைஞர்கள்பலர் அமர்ந்திருந்தனர்.

வந்து தமது அனுதாபத்தைத் தெரிவித்த பிரதமர், அருகிலிருந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்திற்கும் வணக்கம் தெரிவித்தனர்.

வலதுபக்கத்திலிருந்த கூட்டணி எம். பி.க்கள் எழுந்து சென்று எதிர்ப்பக்கத்திலிருந்த பிரதமருடனும் அமைச்சர்களுடனும்உரையாடினர். அங்கிருந்தகூட்டணிஎம். பிக்களில்ஒரே ஒரு எம்.பி. தான் அமைச்சர்கள் இருந்தபக்கம் எழுந்து செல்லவில்லை, அவர்தான் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம். அவர் அமைச்சர் இருந்த பக்கமேபார்க்கவில்லை.

### பண்டிதர் மகஜர்

பிரதமருக்கு பின்வரிசையில் இருந்த போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பி. இரத்னயக்கா எழுந்து பண்டிதர் கா. பொ. இரத்தினம் இருந்த பக்கத்திற்கு வந்து அவருக்கு அருகிலிருந்து உரையாடினார். அச்சமயம் பண்டிதர் இரத்தினம், ஒரு என்வலப்பை எடுத்து அமைச்சரிடம் கொடுத்தார். அமைச்சர் அதில்உள்ள கடிதத்தை எடுத்துப் படித்தார். இதை எனக்கருகில் அவதானித்துக்கொண்டிருந்த தீவுப்பகுதி வயோதிபர் ஒருவர் தமது நண்பரிடம் "தீவுப்பகுதி பஸ்சேவைபற்றித்தான ஏதோ மகஜர் கொடுக்கிறார் போலிருக்கிறது" என்றார். அந்த மகஜர் என்னவாக இருக்குமென அறிய விரும்பி அவ்விடத்திற்குச் சென்றேன. துரையப்பா கொலைவழக்கில் எதிரிகளான ஏழு இளைஞர்களையும் மூதறிஞருக்கு அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யுமாறு இளைஞர் பேரவையினர் கைச்சாத்திட்டு விடுத்த கோரிக்கை அடங்கிய மகஜரைத்தான் பண்டிதர் கா.பொ இரத்தினம், போக்குவரத்து அமைச்சர் திரு. கே. பி. இரத்னயக்காவிடம் கையளித்தார் என்பதை அறிந்து கொண்டேன்.

அந்நேரம் அமைச்சர் இரத்னயக்காவுக்குச் சமீபத்தில் தான், வண்ணை ஆனந்தன் அமர்ந்திருந்தார். பண்டிதர் கோரிக்கை பற்றி அவரும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

### காசிஆனந்தனும் அமைச்சர் இரத்நாயக்காவும்

அமைச்சர்களும், சிறைமீண்ட இளைஞர்களும், இளைஞர் பேரவையினரும், மண்டபத்திற்குள் மிக நெருக்கமாக ஊசாடிக் கொண்டிருந்தனர். அமைச்சர் இரத்நாயக்கா, அருகிலிருந்த மட்டுநகர் எம்.பி. திரு. இராசதுரைக்கு வணக்கம் தெரிவித்தபின் திரும்பியபோது, ஒருவர் ஓடிவந்து அருகிலிருந்த கவிஞர் காசிஆனந்தனைச் சுட்டிக் காட்டி 'இவர்தான் காசி' எனக்கூறி அறிமுகப்படுத்தினார். அமைச்சர் இரத்னயக்கா காசி ஆனந்தனுக்கும் வணக்கம் தெரிவித்தார். பதிலுக்கு காசி ஆனந்தனும் வணக்கம் தெரிவித்தார்.

### சந்திரகாசனுடன் தபாலமைச்சர்

எதிர்ப்பக்கத்திலுள்ள இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த அமைச்சர் குமாரசூரியர் எழுந்து வந்து, திருமதி செல்வநாயகத்திற்கு வணக்கம் தெரிவித்தபின் திரு. சந்திரகாசனின் தோளைப்பற்றிய படி அமைச்சர் ஆறுதல் கூறினார். அதன்பின் அருகில் நின்ற திரு அமிர்தலிங்கத்திற்கு வணக்கம் தெரிவித்தார்.

பின்னர் மட்டுநகர் எம. பி. திரு. இராசதுரைக்கு தபால் அமைச்சர், வணக்கம் தெரிவித்தபோது திரு. இராசதுரையும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தபின் தமது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம், திரு. அமிர்தலிங்கம் திரு. துரைரத்தினம் எம். பி. ஆகியோர் எதிர்ப்பக்கத்திற்குச் சென்று அமைச்சர்களுடன்உரையாடிக் கொண்டிருந்தனர். 'மட்டுநகர் எம். பி.திரு. இராசதுரையும் எழுந்து சென்று அமைச்சர்களுடன் உரையாடினார்.

பிரதமரும், அமைச்சர்களும் காலை பத்து மணியளவில் மீண்டும் திருமதி செல்வநாயகத்திற்கும் கூட்டணி எம். பிக்களுக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு பிரதான வாசலினால் வெளியில் சென்றனர்

பிரதமர் காரில் ஏறியதும் அவரது கார் புறப்பட்டது. மக்கள் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு பிரதமரைப்பார்த்து கைகளை அசைத்தார்கள். அதன்பின் அமைச்சர்களும் காரில் ஏறிச்சென்றார்கள்.

### நினைவுச் சின்னத்தை பார்த்துச்சென்றனர்

வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் நிறுவப்பட்ட தமிழாராய்ச்சி நினைவுச் சின்னத்தைப் பார்த்தபடி பிரதமர் சென்றார். அமைச்சர்களில் சிலரும் அந்தப்பக்கம் பார்த்துக்கொண்டு சென்றார்கள்

கியூவில் காத்துநின்ற மக்கள் தொடர்ந்து அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

---

## தந்தை மறைவும் யாழ். நகரும்

எங்கு பார்த்தாலும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தொண்டர் பட்டிஅணிந்த இளைஞர்கள் காணப்பட்டனர்.

### பிரதமரும் அமைச்சர்களும்

வீரசிங்கம் மண்டபத்தின் அருகே தபால்நிலையப்பக்கத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்றனர். காலை 9-30 மணியளவில் பிரதமரின் கார் வந்தசமயம், றீகல் தியேட்டர் பக்கம் நின்ற மக்கள் மற்றப் பக்கத்திற்கு ஓடிவந்து பிரதமரைப் பார்ப்பதற்கு ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தனர்.

பிரதமரைத் தொடர்ந்து மற்றும் ஆறு அமைச்சர்களும் சபாநாயகரும். டி. ஐ.ஜி. திரு. அனே செனவரத்னவும் வந்தனர். இவர்கள் மண்டபத்திற்குள் நுழைந்ததும் மண்டபத்திற்குள் இருந்த அத்தனை பேரும், அவர்கள்பக்கம் நோக்கினார்கள். கூட்டணிச்செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கமும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், பிரதமரையும் அமைச்சர்களையும் அழைத்துச்சென்றனர். பிரதமரும் அமைச்சர்களும் மண்டபத்திலிருக்கும்வரை, எவரும் அஞ்சலிசெலுத்துவதற்காக உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

பிரதமரும் அமைச்சர்களும் அஞ்சலி செலுத்தியபின்னர் அருகிலுள்ள ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர். எதிர் வரிசையில் அமர்ந்திருந்த திருமதி செல்வநாயகத்திடம்

---

## மீளமுடியாத பேரிழப்பு

### இ. தொ. க. அனுதாபம்

கொழும்பு, புதன்

உலகத் தலைவர்கள் வரிசையில் முன்னணியில் வைத்துப் போற்றப்படும் ஒப்பற்ற தலைவர் மூதறிஞர் தந்தை செல்வநாயகம் அவர்களின் சடுதி மறைவு மக்கள் அனைவரையும் விசேடமாக இந்நாட்டு தமிழ் மக்கள் அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டது. இத்தகைய ஓர்அரசியல்மேதையை நாம் இனிமேல் காண்பது அரிது.

இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு. பரராஜசிங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடிமிகுந்த காலகட்டத்தில் அவரின் மறைவு இந்நாட்டுத் தமிழ்மக்களுக்கு மீளமுடியாத பேரிழப்பு என்றும் தமது அநுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்வதாகவும் 'அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம-இ)

---

## கிராமசபை அனுதாபம்

அனலைதீவு, புதன்

தந்தை செல்வாவின் மறைவையொட்டி அனலைதீவு கிராமசபை அனுதாபத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

கடந்த வாரம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில்தந்தையின் மறைவுகுறித்து மௌனஞ்சலி செலுத்தப்பட்டதுடன் கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டது.

(இ)

---

## இளைஞர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்தவர் தந்தை

கொழும்பு, புதன்

தமிழ் இனத்தின் தன்னிகரற்ற தலைவனும் மாபெரும் அரசியல் மேதையுமான தந்தை செல்வா அவர்களின் மறைவு தமிழ் இனத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழ் தொழிற் சங்கக் கூட்டணிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;-

சிதறுண்டிருந்த தமிழ் சமுதாயத்தை ஓரணியின்கீழ் கொண்டுவந்து, ஐக்கியப்படுத்தி தமிழ் இனத்தின் விடுதலைக்கு வழிகாட்டிய பெருமகனார் தமிழ் தொழிலாளர்களை ஓரணியில் கொண்டுவருவதற்கு தமிழ் தொழிற் சங்கம் கூட்டணியை உருவாக்க வித்திட்டார். இளைஞர்களின் உணர்வுக்கு பெருமதிப்பளித்து வந்த பெருந் தலைவரின் மறைவால் இளைஞர்களும், தமிழ் தொழிலாளர்களும், தமிழ் மக்களும் தாங்கொணாத் துயரக் கடலில் ஆழ்ந்து தவிக்கின்றனர். அன்னார் காட்டிய வழியில் உறுதி கொண்டோர் அவர் இலட்சியத்தை அடைய சபதம் மேற்கொள்வதன்மூலம் அன்னாரின் ஆத்மசாந்திக்கு வழி செய்தவர்களாவோம்.

(ம-இ)

---

"கல்வி நிலையங்கள்

## ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்க வேண்டும்"

அரியாலை, புதன்

'கோயில்களும், நூல்நிலையங்களும் ஒரு கிராமத்தை முன்னேற்றுகின்றன. கிராம மக்கள் அறிவுவிருத்தியால் நாடும் தேசமும் முன்னேற்றமடைகின்றன. சிறுவர்பாடசாலைகள் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தையும் அறிவையும் புகட்ட வேண்டும். அவர்களை நல்ல பிரஜைகளாக்க முன்னின்று உழைக்கவேண்டும்.'

இவ்வாறு உரும்பராய் மேற்கு ஸ்ரீவைத்தீஸ்வரா சன சமூக நிலையப் பாலர்பாடசாலையை ஆரம்பித்துவைத்து சிவநெறிப் புரவலர் க. கனகராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

உரும்பராய் மேற்கு வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ பூசையில் கலந்து கொண்டபின்னர் சிவநெறிப் புரவலர், வைத்தியகலாநிதி, எஸ். சுப்பிரமணியம், கோப்பாய் எம். பி.திரு. ஸி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர் ஊர்வலமாக பாலர்பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஸ்ரீவைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தலைவர் திரு. ச. துரோணாச் சாரியார் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கோப்பாய் எம்.பி. திரு. ஸி. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், 'பாலர்களுக்கெனப் பாடசாலைகள் அமைப்பதன் மூலம் நாம் சமுதாய அமைப்பை மாற்றமுயற்சிக்கிறோம். அடிமைத்தனத்திலிருந்து தமிழர் பூரணவிடுதலை பெற்றுதமக்கென சுதந்திரமுள்ள தமிழ் ஈழத்தை அமைக்கநாம் முயன்று வருகிறோம். தமிழ் ஈழத்தின் சிந்தனையாளர்களை இது போன்ற பாலர்பாடசாலைகளே உருவாக்கவேண்டும்' என்றார்.

வைத்தியகலாநிதி எஸ். சுப்பிரமணியம் பேசுகையில், 'ஒழுக்கமும், கடமையுணர்வும், சிந்தனைத் திறனுமுள்ள நல்ல பிரஜைகள் நாட்டில் தோன்றவேண்டுமானால் பாலர் பாடசாலைகள் தொடக்கம் உயர்வகுப்புகள்வரை சிறந்த

(7ம் பக்கம் பார்க்க)

# “துருவ நட்சத்திரத்தை இழந்து தமிழினம் தவிக்கிறது”

## அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் கவலை

கொழும்பு, புதன்

‘‘ஈழம் பெற்றெடுத்த தவப்புதல்வனும்: ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்களின் ஒப்பற்ற தலைவனும், அகிம்சா வாதியும். சட்டமேதையுமான மூதறிஞர் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகத்தை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மையெல்லாம் நிர்க்கதியாக விட்டுவிட்டு பிரிந்து சென்றுவிட்டார், அரசியல் வானிலே கால் நூற்றாண்டுக்கு மேலாக துருவ நட்சத்திரமாக பிரகாசித்து, தமிழ்பேசும் மக்களின் அன்புக்குரிய தந்தையாகவும், அரசியல் தலைவராகவும் திகழ்ந்த தந்தை செல்வா இன்று எம்மத்தியிலே இல்லை யென நினைக்கும்பொழுது எமது துயரை நீக்குவார் யாருளரோ?’’

மேற்கண்டவாறு தந்தை செல்வாவின் பிரிவு குறித்து அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

‘‘சாந்தம், பொறுமை, எளிமையின் பிறப்பிடமாகத் திகழ்ந்த எமது தலைவர் தமிழ்பேசும் மக்களின் இடர்களைத் தீர்க்கவும், அவர்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்வை வழங்கவும் தன்னையே அர்ப்பணித்த தியாகிகளுள் ஒருவர் பதவி ஆசையோ. அகங்காரமோ இன்றி மக்களின் தலைவராக மக்களின் மத்தியில் வாழ்ந்த ஒளி மறைந்துவிட்டது.

ஒருவர்பின் ஒருவராகப் பல தலைவர்களை இழந்துநிற்கும் தமிழ்கூறும்நல்லுலகம் தந்தை செல்வா காட்டிய வழியைப் பின்தொடருவதன் மூலம் அவரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யலாமென்பதில் ஐயமில்லை. அவரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக’’ என்று சங்கம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

### கண்ணீர்மீது ஆணை

புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கம் விடுத்த அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

‘‘தமிழ் ஈழத் தேசிய இனத்தின் இணையற்ற பெருந்தலைவா! எங்கள் விடிவிளக்கே! தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற தமிழ் சமுதாயத்தை வாழ்விக்கவந்த தெய்வமே எமக்கு விடுதலை பெற்றுத்தராமல் எம்மை அந்தரத்தில் தவிக்கவிட்டு ஆறுதல் எடுத்துவிட்டாயா? தள்ளாத வயதிலும் தாயகத்தின் மீட்சிக்காக தளராது பாடுபட்ட நாயகனே! தமிழினத்தைத் தனியாகத் தவிக்கவிட்டு மேலுலகு சென்றாயா? உன் ஆணைக்கு அடிபணிந்து நடக்க ஆயிரமாயிரம் பேர் காத்திருக்க நீ மட்டும் பேசாமல் போய் விட்டாயா? மாளாத்துயரில் எம்மை விட்டு மீளாத்துயிலில் மூழ்கிவிட்டாயா? எங்கள் இயக்கத்தின் பல தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக இழந்தும் நீ இருக்கிறாய் என்ற நம்பிக்கையில்தானே நாம் ஆறுதல் அடைந்திருந்தோம். எங்கள் உயிர்மூச்சே! நீருமா எம்மை விட்டுப் போய்விட்டீர்!

உங்கள் பிரிவால் நாம்வடிக்கும் கண்ணீரின்மீது ஆணையிட்டுச் சொல்கிறோம்! கண்ணீரும், செந்நீரும்சிந்தி கட்டி வளர்த்த விடுதலைஇயக்கத்தை கண்போலக் காத்து உங்கள் ஆசைத்தமிழ் ஈழத்தை அமைத்தேதீருவோம்!

### இணையற்ற பேரிழப்பு

முதிர்ந்த அரசியல் ஞானமும், தமிழினத்தின் தலைவருமாக விளங்கிய செல்வாவின் இழப்பு தமிழ்மக்களுக்கு ஈடு இணையற்ற பேரிழப்பாகும்.

அ. இ. திருவள்ளுவர்மகாசபை பொதுச் செயலாளர் திரு. எஸ், தில்லைநாதன், மூதறிஞர் செல்வாவின் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### ஈடுசெய்ய முடியாத இழப்பு

யாழ். முஹியித்தீன் முற்போக்கு இயக்க சனசமூக நிலையம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளதாவது:

சகல இனமக்களையும் சமமாக மதித்த அவர், அமைதியான பண்பால் அனைவருக்கும் இனியவராக விளங்கினார். சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை நேர்மையாக தீர்த்து வைக்க முன்வந்த பெருந்தகை அவர். அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு.

### உலகத்தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி

மானிட வாழ்வுக்கு இன்றியமையாத சகல பண்புகளையும் கொண்ட தமிழ் ஈழம் பெற்றெடுத்த உத்தமர் செல்வாவின் மறைவு உலகவாழ் சகல தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும். சிறப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் பொதுவாக இலங்கை அரசியற்றுறைக்கும் சொல்லவொண்ணா நஷ்டமாகும்.

ஈழம்வாழ் தமிழ் இனம்கடந்த கால் நூற்றாண்டிற்கு முன் பிரதேசத்தால் வேறுபட்டு மதத்தால் பிளவுபட்டு, சமூக ஏற்றத் தாழ்வால் சிதறுண்டு கிடந்த நிலையை மாற்றிதம் வாழ்வால் சிதறுண்டு கிடந்த நிலையை மாற்றி தம் வாழ்நாளில் பாதியையும், உழைப்பின் பெரும் பகுதியையும் இனத்தின் விடுதலைக்காக அர்பணித்தார்.

கடந்த மூன்றரை நூற்றாண்டு காலமாக அடிமையாக தன்மானமற்றவர்களாக வாழ்ந்த ஈழத் தமிழர் சமூகங்களை தட்டி எழுப்பி உணர்வூட்டி, எமக்கு விடுதலை உணர்ச்சி பொங்கிடச் செய்தார். சலுகைகள் பெற்று வாழ்ந்த அடிமைகளை, உணர்வுடன் உருமை கேட்க வைத்தார்.

எமது உரிமைகளை மறைத்தும், மறுத்தும் வந்த தென்னிலங்கை வாழ் அரசியல் வாதிகளையும், பொது மக்களையும், தமிழ் இனக் கோரிக்கைகள் நியாயமானவை, நீதியானவை, என அவரது அரசியல் பாதை வழிகாட்டியது. அன்னாரின் மறைவால் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை நிரப்புவது மிகக் கஷ்டமாகும்.

### இலட்சியக் கனவை நிறைவேற்றுவோம்

எம் அருந்தலைவனை இழந்து தவிக்கும் நாம் அத் தலைவனின் ஆத்ம சாந்திக்கு செய்யக் கூடியது பிராத்தனை மட்டுமல்ல, தலைவர் எந்த இயக்கத்தின் கீழ் தமிழ் ஈழம் அமைக்கத் தொண்டாற்றினாரோ அந்த இலட்சியக் கனவை நிறைவேற்றுவதே அவரது ஆத்ம சாந்திக்கு நாம் செய்யும் பெரும் தொண்டாகும். வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் இளைஞர்பேரவை அமைப்பாளர் விடுத்துள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### ஆருத்துயரில் ஆழ்த்தியுள்ளார்

தலைவர்களுக்கெல்லாம் தலைவராய், சாந்தசொரூபியாய், கண்ணியமிக்க கனவானாய்த் திகழ்ந்த அரும்பெரும் தலைவர் மீளாத்துயில் கொண்டுவிட்டார். ஈழத்துக் காந்தி என இலங்கை வாழ் மக்களால் மட்டுமன்றி உலகின் பலபாகங்களில் வாழும் சுதந்திரப் பிரியர்களாலும் போற்றிப் புகழப்பட்ட உத்தம புருஷர் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றுவிட்டார்.

யாழ். மாவட்ட சிவாஜி கணேசன் ரசிகர் குழு வெளியிட்ட அனுதாபச் செய்தி இது.

### கைதடிமேற்கு ச. ச. நிலையம் அனுதாபம்

சட்டமாமேதையும் செயல் திறன் வீரரும் தன்னிகரில்லாத் தலைவருமான தந்தை செல்வாவின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்று கைதடி மேற்கு சனசமூக நிலையத்தினர் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

### வங்கி ஊழியர் செய்தி

‘‘தந்தை செல்வாவின் மரணம் எம்மையெல்லாம்மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. தமிழ் இனத்தின் தன்னிகரில்லாத் தலைவனை இழந்து பரிதவிக்கும் நாம் உங்கள் துயரில் பங்குகொள்கின்றோம்.’’

இலங்கை வங்கி தமிழ் ஊழியர்கள் திருமதி செல்வநாயகத்துக்கு அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

(ம)

### எழுச்சியின் சின்னம்

திரு. நாவேந்தன் வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

‘‘ஈழத்தமிழரின் எழுச்சியின் சின்னமாக இலங்கிய பெரியார் மூதறிஞர் செல்வநாயகம் அமரராகிவிட்டாலும் அவரது நினைவுகள் சிரஞ்சீவியாகிவிட்டன. அன்னாரைப் போன்று தாம் கொண்ட இலட்சியத்திற்காக எதையும் தாங்கும் இதயம்படைத்த இன்னொரு தலைவரை இனிமேல் காண்பது அரிது. இலட்சியத்திற்காக இன்னல்தரும் சிறைச்சாலைக்கும் இன்முகத்துடன் சென்றுவந்த செம்மல். அப் பெரியாரது ஆத்மா சாந்தியடையும் வகையில் தமிழினம் ஓரணியில் நின்று தனது மொழி, இன, கலாச்சார உரிமைகளைப் பாதுகாக்க எத்தகைய இன்னல்களையும் சகித்துக் கொண்டு போராடுவதொன்றுதான் நாம் அவருக்குச் செலுத்தக் கூடிய அதியுயர்ந்த அஞ்சலியாகும்’’!

### இளைஞர்பேரவை கவலை தெரிவிக்கிறது

‘‘தமிழ்இனத்தின்முதுபெரும் தலைவரும், தமிழ் உரிமைக் காவலரும், மூதறிஞரும், தமிழர்கூட்டணி தலைவருமான திரு. எஸ். ஜே. வி, செல்வநாயகத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் தமிழ்இனத்தின் இலட்சியமான தமிழ்ஈழம் அமைப்பதே அவருக்கு நாம் செய்யும் தொண்டாகும்’’ என்று கிளிநொச்சி இளைஞர் பேரவை, தமிழர் கூட்டணி மகளிர்பேரவையினர் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளனர்.

### விடுதலைஉணர்வை ஊட்டியவர்

ஈழத்தமிழினத்தின் துயர் துடைக்க தமிழ் ஈழம் மலர்வதைவிட வேறுமார்க்கமே கிடையாது என்ற உணர்வை- விடுதலைத் தீயை - தமிழ்மக்களுக்கு மூட்டிய தந்தைசெல்வா தமது பணியை நம்மிடம் விட்டுச் சென்றுள்ளார். அவரது இலட்சியத்தை நிறைவேற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் உளமார்ந்த அஞ்சலியாகும்.

யாழ்.கிறீன்பீல்ட்விளையாட்டுக்கழகம் வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரத்தினபுரியில் சுவரொட்டி

தந்தை செல்வாவின் மறைவு குறித்து இரத்தினபுரி இந்துஇளைஞர் சங்கத்தின் சார்பில் காரியதரிசி தீவான் தவராஜா அனுதாபச்சுவரொட்டி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

# ஆசிரியர் நியமனம்

## வி என். நவம் அறிக்கை

யாழ்ப்பாணம், வியா

‘‘ஆசிரியர் நியமனம் தகுதி, திறமை, அடிப்படையில், பகிரங்கப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் நடைபெற வேண்டும் என்று நாம் கல்வியமைச்சரை ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பாராளுமன்றத்திலும்நேரிலும் கேட்டுக் கொண்டுள்ளோம். இப்போது நடக்கும்ஆசிரியநியமனத்திலாவது நமது தொகுதிகளைப் பொறுத்தளவில் ஒரு பகிரங்கப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் தகுதியில், திறமையில்- அடிப்படையில் நியமனம் நடைபெறுவதையே நாம் வரவேற்கிறோம்’’.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் வெளியிட்டஅறிக்கையில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் அங்கம் வகிக்கும் தொகுதிகளில், ஆசிரிய நியமனங்கள் நூற்றுக்குநூறு வீதம் வெளிப்படையாகவும், நேர்மையாகவும், தகுதிதிறமையின் அடிப்படையிலேயே நடைபெறுமென்று கல்வியமைச்சின் உயர்மட்டஅதிகாரிகள் தமிழர் கூட்டணி எம். பி.க்களுக்கு அறிவித்துள்ளனர்.

தகுதியுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாவிட்டாலும் தகுதியற்றோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் பட்டிருந்தாலும் அதை ஆதாரபூர்வமாக உடனடியாக சுட்டிக் காட்டினால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உதாரணமாக சாவகச்சேரி தொகுதியில் ஆங்கிலஉதவி ஆசிரியர்களாக சகல பாடங்களிலும், ஆங்கிலமொழியில் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டுள்ளனர். சகலபாடங்களிலும், ஆங்கிலமொழியில் சித்தியடைந்திருந்து அவர்விண்ணப்பித்திருந்தும், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாமலிருந்தால் அதை, ஆதார பூர்வமாகச் சுட்டிக்காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் ‘ஏ’ பிரிவு சித்திக்கு 4 புள்ளிகளும், ‘பி’ பிரிவுக்கு 3 புள்ளிகளும், ‘சி’ பிரிவுக்கு 2 புள்ளிகளும் ‘எஸ்’ (சாதாரண) பிரிவுக்கு ஒரு புள்ளியும் கொடுக்கப்படும்.

சாவகச்சேரித் தொகுதியில் விஞ்ஞானப்பகுதிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 32 பேரில் கடைசி நபருக்கு உயர்தரபரீட்சையில் 5 புள்ளிகள் உண்டு. ஆகவே 5 புள்ளிகளோடு விஞ்ஞானப்பகுதிக்கு விண்ணப்பித்தவர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாவிட்டால், அவர்கள் எனக்கு அல்லது கல்வி அதிபருக்கு முறையிடவேண்டும்.

ஒரு பரீட்சார்த்திக்குஇருக்க வேண்டிய தகுதிகள் அத்தனையும், விண்ணப்பிக்கும் திகதியன்றே இருக்கவேண்டியது அவசியம்.

நான் மேற்கூறியஅடிப்படையில், சகலகாலங்களிலும், சகல இடங்களிலும், ஆசிரியர் நியமனங்கள் நடந்திருந்தால், இளம்உள்ளங்கள் புண்பட்டு, வாழ்வில் சோர்வும், ஏமாற்றமும் அடைய வேண்டிய நிலை உருவாகியிருக்கமுடியாது.

(க-இ)

# செல்வாவின் இலட்சியங்கள் நிறைவேறும் காலம் தூரத்திலில்லை

யாழ்ப்பாணம், வியா

பெரியார் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவு தமிழினத்துக்கு மட்டுமல்ல இலங்கை முழுவதுக்குமே ஒரு பேரிழப்பு. அவருடைய அடக்கம், நாணயம், எளிமை, அரசியல்மேதைமை, பதவிப் பற்றின்மை, ஜனநாயகப்பண்புகள், விடாமுயற்சி, ஆத்மீக பலம், உள்ளத்தூய்மை, கடமையுணர்ச்சி, சமுதாயப் பரந்த நோக்கு, முதிர்ச்சியறிவு முதலியன நம் இளம் சந்ததியினர் மட்டுமல்ல, மொத்தக் கற்ற மற்றைய தலைவர்களே பின்பற்றிப் பலன்பெறக் கூடியவை. அவருக்கு அரசியல் மேடையிலே எதிர்ப்பு இருந்திருக்கின்றது. எனினும் அவரை ஒரு எதிரி என எவரும் உண்மையிலே கருதியிருக்க முடியாது.

செல்வாவின் மறைவு குறித்து கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பெருமை அவர்ன் மறைவின்பின் பன்மடங்கு பெருகி உலகரீதியாகப் பரவும் என்றும், இலங்கையைப் பற்றியும் இன்று பல பிரச்னைகளைச் சுமந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களைப்பற்றியும் பெரியார் செல்வநாயகம் கொண்டிருந்த இலட்சியங்கள் நிறைவேறும் காலம் தூரத்திலில்லை என்றும் நான் மனதார நம்புகிறேன் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராணி யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
புரட்சித்தலைவர்
∴ எம். ஜி. ஆர் ∴ லதா
(இரு வேடங்களில்)
∘° நிர்மலா ∘° நாகேஷ் ∘° ராஜ்ஸ்ரீ
கஜேந்திரா பிலிம்ஸாரின்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 58-வது நாள்
ஸ்ரீதர் ∘° சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ∘° ஜெயலலிதா ∘° சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா ஜெமினி — சரோஜாதேவி
(யாழ். நகர்) (இன்று மட்டும்) தினசரி 4 காட்சிகள்
தாமரை நெஞ்சம்

6-5-77 முதல் திருவருள் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ∘° முத்துராமன் ∘° சுஜாதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

RIO
Entering Jaffna with Hilarious Comedy
LAUGH - LAUGH - LAUGH
HOLIDAY ON THE BUSES
We guarantee, you will have a really hot time.

REGAL (JAFFNA) ஜனத்திரள் நிறைந்த 3-வது வாரம்!
Daily at 4-45, 7-00 & 9-30 p.m. only
அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)
From 9-5-77 ALFIE DARLING

94-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∵ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∵ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∵ சௌகார் ஜானகி, ∵ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

# நீச்சல் குளத்தில் இளைஞர் சடலம்

கொழும்பு, புதன்
கொழும்பு சென் ஜோசப் கல்லூரி நீச்சல்குளத்தில்சுமார் 30 வயது மதிக்கத்தக்க இளைஞரின் சடலம் ஒன்று நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வயிற்றில் சத்திரசிகிச்சை அடையாளம் கொண்ட இவரின் சடலம் பொரளை ஆஸ்பத்திரியில் பொதுமக்கள் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (இ)

# "நாடகக்கலை மூலம் எழுச்சியை ஏற்படுத்தலாம்"

யாழ்ப்பாணம், வியா
"எமது நாட்டின் விடுதலைக்காக நாடகக்கலைகள் மூலம் தமிழ்மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கலாம். இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழில் மூன்றும்இடத்தில் நிற்கும் நாடகத தமிழ்தான் இன்று மக்களை அதிகம் கவரும் ஒன்றுகத்திகழ்கிறது.

இவ்வாறு அல்லைப்பிட்டிச் சித்திரகலா நாடகமன்றத்தினர் நடாத்திய நாடக விழாவில் பேசிய நல்லூர் தமிழ் இளைஞர் பேரவையை சேர்ந்த திரு. எஸ். எம். கிருஷ்ணசாமி கூறினர். இவ் விழாவுக்குக் கிராமசபைத்தலைவர் திரு.செ. தவவிநாயகம் தலைமை வகித்தார். திரு. கிருஷ்ணசாமி மேலும் பேசுகையில் "வளரும் எங்கள் நாட்டுக்கலைஞர்களும் விரமும் தியாகமும் நிறைந்த தமிழ்ச் சரித்திர நாடகக்கலை மூலமாகத் தமிழ்மக்களை விடுதலை உணர்வு நிறைந்தவர்களாகஉருவாக்கமுன்வரவேண்டும். மறைந்த எமது ஒப்பற்ற தலைவர் செல்வாவுக்கு நாம் அறிஞர் அண்ணா, டி. கே. சண்முகம், கலைவாணர் என். எஸ். கே.போன்றதமிழ்நாட்டு அறிஞர்களும் நாடகக்கலை மூலமாகத்தான் தமிழ்மொழியைச் சிறப்படையச் செய்தார்கள்.

செய்யும் அஞ்சலிஒன்றுஇருக்குமானால் தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட கூட்டணி என்ற கோட்டையைச் சிதைவுறவிடாமல் தமிழ்மக்கள்அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழ் ஈழம் அமைப்பதேயாகும். இது தான் மறைந்த தலைவருக்கு நாம் செய்யும் சிறப்பான அஞ்சலியாகும்" எனக்கூறினர்.

திரு. பொன். மதிமுகராசா பேசுகையில், "முப்பதைந்து லட்சம் மக்களின் தலைவராக இருந்த தந்தை செல்வநாயகத்தின் ஆவலும் ஆசையும் தமிழ் மக்களாகிய நாம் எமக்கென்று ஒரு தனிநாடு அமைத்துவாழ வேண்டும் என்பதுதான்" என்றார் (கி-அ)

## ஒழுக்க முள்ள...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

போதனைகள் அளிக்கப்பட வேண்டும்' என்றார்.

கிராமசேவையாளர் திரு.அ. க. த. கிருஷ்ணராசா, சமாதான நீதிபதி திரு. கே. தவஞானம், திருவாளர்கள் அருளம்பலம், சு. நாகர், சி.சந்திரபாலன், பே.யேசுதாசன் ஆகியோரும் பேசினர். (ஜி-அ)

## தூதுவர்கள் அனுதாபம்

யாழ்ப்பாணம், வியா.
"தமிழ் விடுதலைக் கூட்டணியின் மதிப்புக்குரிய பெருந்தலைவரான திரு.செல்வநாயகத்தின் மறைவு குறித்து எனது சார்பாகவும் எனது ஊழியர்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்"

மேற்கண்டவாறு இந்தோனேஷிய தூதுவர் தந்தை செல்வாவின் மறைவு குறிதது அனுப்பிய அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
நாகேஸ்வரராவ்—பானுமதி
கானல்நீர்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
நீதிதேவன்
6, 7, 8-5-77
பொன்மணி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
வேட்டைக்காரன்

# 36 ஆயிரம் கிராமங்களுக்கு தபால் வசதி இல்லை

புதுடில்லி, மே 4
இந்தியாவில் 36 ஆயிரம் கிராமங்கள் தபால் வசதியின்றி இருக்கின்றன.

இக் கிராமங்களுக்கு இவ்வருட இறுதிக்குள் தபால்சேவை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று ஜனதா கட்சி அரசு தெரிவித்துள்ளது. (இ)

## தமிழ் விண்ணப்பதாரிகள் சங்கடம்

யாழ்ப்பாணம்,வியா.
கமத்தொழிற் சாதனபாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாகக் கடந்த மாதம் 7-ம் திகதிய அரசவர்த்தமானியில் தமிழில் வெளியாகி இருந்த அறிவித்தலில் விண்ணப்பத்தாரிகள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருகிறது.

சிங்கள மொழியில் விண்ணப்பத்தாரி விவாகம் செய்யாதவராக இருத்தல் வேண்டுமெனச் குறிக்கப்பட்டுள்ளது இதில் சிங்கள மொழியில் பிரசுரமாகியிருப்பதை சரியெனக் கூறப்படுகிறது. ஆங்கில மொழிபெயர்ப்பு இல்லாத காரணத்தால் சிங்களம் தெரியாத தமிழ் விண்ணப்பதாரிகள் இதனால் பெரும் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ் மொழி கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்த 17க்கும் 24 வயதுக்கு இடைப்பட்ட ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் இம் மாதம் 20ம் திகதிவரை இக்கற்கை நெறிக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். திருநெல்வேலி, கிளிநொச்சி, வவனியா ஆகிய இடங்களில் இக்கற்கை நெறி தமிழில் நடத்தப்படும். (கி-அ)

## இன்று கும்பாபிஷேகம்

# வெள்ளெருவைப் பிள்ளையார்கோவில்

சோழ நாட்டில் விசயராச சோழன் அரசாண்ட காலத்தில் யாழ் நகரில் பல இடங்களிலும் விநாயகப்பிரதிஷ்டை நடைபெற்றது. அக் காலம் மரக்கலமூலம் பருத்தித்துறைத் துறைமுகத்தில் இறக்கிய ஒரு விநாயக விக்கிரகம் கால் நடையாக எடுத்துவரப்பட்ட போது கோவை எனும் பதியில் இலந்தை மரங்கள் நிறைந்த இடத்தில் வைத்து விட்டு இளைப்பாறினர்கள். பின் விநாயகரை எடுப்பதற்கு முயற்சித்தபொழுது அதனை எடுக்கமுடியவில்லை. அதனால் அப்பெருமானை அவ்விடத்திலேயே விட்டுவிட்டுப் போய் விட்டார்கள்.

அவ்விடம் மாடு மேய்ப்பவர்கள் விக்கிரகத்தைக் கண்டு போய் யாவர்க்கும் இதுபற்றி முறையிட்டார்கள். அவர்களில் சபாபதி ஐயரின் முன்னோர் அவ்விடம் சென்று வெள்ளெருக்க மரத்தையும் விநாயகரையும் கண்டு விளக்கேற்றி வழிபாடு செய்து பொங்கல்பூசை செய்து வந்தார்கள். பின்னர் ஊரவர்களின் உதவியால் ஒரு சிறந்த மடாலயத்தை உண்டாக்கிப் பூசை செய்து வந்தார். அவருக்கு ஆண்பிள்ளையில்லாத படியால் தனது புதல்வியின் மகன் கு. கார்த்திகேயக் குருக்கள் என்பவருக்கே பூசையையும் பரிபாலிக்கும் உரிமையையும் கொடுத்தார். அவர் ஆகம சாஸ்திரப்படி கோவில் அமைத்து 1900-ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்து பூசைகள் நடத்தி வந்தார்.

1924-ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து துவாஜாரோகணம் செய்து உற்சவம் நடாத்திவந்தார். அதன்பின் அவர் மகன் நீலகண்டக் குருக்கள் கோயிலைப் புதுப்பித்து உற்சவம முதலியன நடாத்தி வந்தார். 1956-ம் ஆண்டு முதல் நீ. சச்சிதானந்த குருக்கள் கோவிலைப் புதுப்பித்து உற்சவம் முதலியன நடாத்தி வந்தனர். 1967-ம் ஆண்டு உபயகரர் அடியார்கள் உதவியுடன் ஒரு சிறந்த சித்திரத்தேர் செய்து அதனில் எம்பெருமான் வீதிவலம் வந்து அருள் புரிகின்றார். மேற்படி ஆலயம் பாலஸ்தாபனஞ் செய்து தற்போது கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம் திருப்பணி வேலையாகவும் விமானம் இரண்டு தளமாகவும் சித்திரங்களுடன் பொலிவாக விளங்குகின்றது. இந்த ஆலயத்தின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

—நீ. சச்சிதானந்தக் குருக்கள்

# ஈழநாடு

The EELANADU


# தகுதியுள்ள அனைவருக்கும் நேர்முகப் பரீட்சை

## சங்கீத ஆசிரியர் தெரிவுபற்றி கல்விப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், வியா

தற்போது நடைபெற்று வரும் சங்கீத ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் பட்டம் பெற்ற தகுதி உள்ள அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இப்பதவிக்கு விண்ணப்பித்த போது இருந்த தகுதி அடிப்படையில் 'சங்கீதபூஷணம்', 'சங்கீத இரத்தினம்' ஆகிய பட்டங்கள் பெற்ற அனைவரும் உட்பட தகுதியுடைய மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக்கிடைத்தும் தவிர்க்க முடியாத காரணங்களினால் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றத்தவறியவர்கள் இன்றுவியாழக்கிழமை மீண்டும் நேர்முகப் பரீட்சையில் தோற்றலாமென்றும் நேர்முகப் பரீட்சையாளர் குழுவின் தலைவராக இருக்கும் திரு மாணிக்கவாசகர் தெரிவித்தார். (இ)

# உடுப்பிட்டி வேட்பாளரின் வெற்றிக்கு உழையுங்கள்

## த. வி. கூ. செயலாளர் அறிக்கை

நெல்லியடி, புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம் நிறைவேறி தமிழினம் சுதந்திரத்தின் ஆதிக்கத்துடன் வாழ தேர்தலில் மக்கள் தமது சொந்த விருப்புக்களை விட்டுக் கொடுப்பதுதான் தியாகமாகும். இத்தியாகத்தை உடுப்பிட்டி தொகுதி வாக்காளர் செய்து உடுப்பிட்டி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக உழைக்கவேண்டும்'

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உடுப்பிட்டி தொகுதிச் செயலாளர் திரு. செ. கிருஷ்ணசிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது 'சர்வ அங்கங்களுக்கும் சிரசு, பிரதானம். அதுபோல் எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் அவற்றின் தலைவர்கள் இட்ட கட்டளைகள் பிரதானம். எனவே தலைவர்கள் நியமிக்கும் வேட்பாளரை ஆதரித்து தமிழ் ஈழவிடுதலைக்காக உழைப்போம்.

### பாராட்டுத் தந்தி

உடுப்பிட்டி தொகுதியை சிறுபான்மை தமிழருக்காக விட்டுக் கொடுத்து, இம்முறை போட்டியிடாமலிருக்கும், உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடியை வல்வெட்டித்துறை தமிழ் இளைஞர் பேரவையினர் பாராட்டி தந்தி அனுப்பியுள்ளனர். (க)

# "சுதந்திரக்கட்சி முடிவு செய்யவேண்டியிருக்கும்"

## தேர்தலின் பின் நிலைபற்றி கம்யூனிஸ்ட் பிரமுகர்

காலி, புதன்

எதிர்வரும் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளிவந்தபின்னர் ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிப்பதா அன்றேல் இடதுசாரி முன்னணியை ஆதரிப்பதா என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான திரு. கே. பி. சில்வா தெரிவித்தார்:

கம்யூனிஸ்ட் கட்சியின் காலி மாவட்டக்கிளையின் புதிய அலுவலகத் திறப்புவிழாவில் திரு. சில்வா பேசினார்.

மாத்தறை எம். பி. திரு பி. வை. துடாவை, ரத்கம எம். பி. திரு. எம். ஜி. மெண்டிஸ் ஆகிய இருவரும் இப்புதிய அலுவலகத்தைத் திறந்துவைத்தனர்.

திரு. கே. பி. சில்வா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தேசிய அரசுப் பேரவையின் பதவிக்காலம் இம்மாதம் 22ம் திகதியுடன் முடிவடைகின்ற போதிலும் அதற்கு முன்னரே பேரவை கலைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

திரு.ஜே ஆர்.ஜெயவர்த்தனவினதும் பிலிக்ஸ். ஆர்.டயஸ் பண்டாரநாயக்காவினதும் சோஷலிஸத்தை கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது.

மாத்தறை எம். பி. திரு. பி. வை. துடாவை பேசுகையில், ஐ. தே. க. தலைமையில் உள்ள பிற்போக்குவாதிகளை முறியடிப்பதற்கு ஒரே வழி இடதுசாரி முன்னணி ஆட்சிக்கு வருவதைவிட வேறில்லை என்றார்.

திரு. எம். ஜி. மெண்டிஸ் பேசுகையில் ஐ. தே. கட்சி கம்யூனிஸ்ட் கட்சியின் பொது எதிரி என்று கூறினர். (இ)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள 'அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.


அரசியல் கைதிகள் இம்சை:

# மாஜி சுப்ரீம் கோர்ட் நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன்

## தமிழ்நாடு அரசு நியமித்தது

சென்னை, மே 4

சென்னை மத்திய சிறையில் அரசியல் கைதிகள் முறைகேடாக நடத்தப்பட்டு அவர்களுக்கு இன்னல் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் புகார்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு தனிநபர் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது.

முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. ஆர். சதாசிவம் தலைமையில் இவ்விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

### முன்னைய தீர்ப்பு

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் முறைகேடாக நடத்தப்பட்டார்கள் என்ற புகார்கள் மீது இலாகா ரீதியிலான விசாரணை நடைபெற்று அக்குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி புகார்கள் கடந்த இரு மாதங்களுக்குமுன் மீண்டும் எழுப்பப்பட்டன.

இதனையடுத்து தனிநபர் விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளதாக அரசின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

இரு மாதங்களுக்குள் இவ் விசாரணைக் கமிஷனின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துவிடும் என தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. பணிக்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ)

# சுந்தரர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்து வடக்கு கிழக்கில் 25 தொகுதிகளில் இளைஞர்களை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துவந்தார்.

நல்லூர் செட்டித் தெரு 4ம் இலக்க இல்லத்தில் தங்கி தேர்தலுக்கான ஒழுங்குகளை கடந்த ஒரு மாதமாக செய்துவந்தார்.

ஈழத் தமிழர் தொண்டர் சபை சார்பில் சில தொகுதிகளுக்கு அபேட்சகர்களையும் நியமித்திருந்தார்.

சிறை மீண்ட காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் மாவை சேனாதிராசாவுக்கு எதிராக அபேட்சகர்களை நிறுத்துவதில்லையென்றும் அவர் அறிவித்திருந்தார்.

நேற்று மற்றும் தொகுதிகளுக்கு அபேட்சகர்களை நியமிப்பதற்காக தேர்தல் மாநாடு ஒன்றை கூட்டியிருந்தார். சிகிச்சை பெறுவதற்காக அவர் கொழும்பு சென்றுள்ளதால் மாநாடு பின்போடப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர் தொண்டர் சபையினரும், சபை அபேட்சகர்களும், ஆதரவாளர்களும், அவரை வந்து பார்த்தனர்.

திரு. சுந்தரலிங்கத்துடன் அவரது பாரியாரும் கொழும்பு சென்றுள்ளார். (க)

# ஐந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை நடத்த தமிழ்க் காங்கிரஸினால் தெரிவு செய்யப்பட்ட ஐவர் குழு. மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தவிருக்கிறது.

கூட்டணியின் ஒற்றுமையை கருத்திற்கொண்டு, தமிழ்க் காங்கிரஸ் வாலிபர்களும் இந்தக் கோரிக்கையை ஏற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஐவர் கொண்ட குழுவில் தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியைச் சேர்ந்த மூவரும், தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியைச் சேர்ந்த இருவரும் இடம் பெற்றுள்ளார்கள். (க)

# தீவுத்தொகுதி—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இதற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் குழுவிடம் கோரப்பட்டது.

ஐந்துபேர்கொண்ட வேட்பாளர் தெரிவுக்குழு ஒன்றும் தெரியப்பட்டது.

உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதித்துவத்தைக் கெடுக்கும்வகையில் அத்தொகுதியில் சுயாட்சிக்கழகம்போட்டியிடுவதில்லை என்ற தீர்மானமும் இக்குழுவில் ஏகமனதாக நிறைவேறியது.

இக்கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து செயற்குழுவின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு, மேற்படி அபேட்சகர் நியமனக்குழுவிடமே பொறுப்புக்கொடுக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குஆரம்பமான இக்குழுக் கூட்டம் இரவு 8 மணிவரை நடைபெற்றது.

# பல லட்சம் செலவில் நினைவாலயம் தோன்றும்

## வெவ்வேறு நினைவுச் சின்னம் வேண்டாம் என்கிறது அறங்காவல் குழு

யாழ்ப்பாணம், வியா

மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு வெவ்வேறு இடங்களில் நினைவுச் சின்னம் எழுப்பும் முயற்சிகளைக் கைவிடுமாறும் இந்நாட்டவரும் பிறநாட்டவரும் மதிக்கும் வகையில் தந்தை தகனம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு நினைவாலயம் அமைக்க அனைவரும் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனவும் நேற்று நியமிக்கப்பட்ட 'தந்தை செல்வா அறங்காவல் குழு' வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நினைவாலயம் நிறுவ பல லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்படுகிறது என்றும் இக்குழு தெரிவித்தது.

தந்தை செல்வா அறங்காவல் குழு ஏழு பேரைக் கொண்டதாக யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை அலுவலகத்தில் நியமிக்கப்பட்டது.

இது தொடர்பான கூட்டம் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், சி. கதிரவேலுப்பிள்ளை சு. நடராசா, மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் உட்பட மற்றும் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### எழுவர் கொண்ட குழு

தந்தை செல்வநாயகம் நினைவு அறங்காவல் குழுவின் தலைவராக திரு. கு. நேசையாவும் பொருளாளராக திரு. சி. கதிரவேலுப்பிள்ளையும் உபதலைவர்களாக திருவாளர்கள்: அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம்ஆகியோரும், செயலாளராக திரு. சச்சிதானந்தனும் உறுப்பினர்களாக திரு. சு. நடராசா. செ. சந்திரகாசன் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

சட்டப்படி இக்குழுவைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் தந்தை செல்வா நினைவாலயம் நிறுவ அரசிடம் இருந்து காணி பெறுவதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதென்றும் தந்தை செல்வா தொடர்பான சொற்பொழிவுகள், ஆய்வுரைகள் வெளியிடுவதற்கு இக்குழுவுக்கு விசேட அதிகாரம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்ட.

இக்குழுவுக்கு ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புவோர் தந்தை செல்வா அறங்காவல் குழு 238, பிரதான வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

### நிதி அளிக்க விரும்புவோர்

தந்தை செல்வா நினைவாலய நிதிக்குழு ஒன்றினை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி அனுப்புவோர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பொருளாளர், 68, குருகெசற் லேன், கண்டிக்குளி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தால் அதற்குரிய உத்தியோக பூர்வ பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

குழுவின் அதிகாரம் பெறுத எவரிடமும் நிதி கொடுக்க வேண்டாமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கூடுமானவரை பொருளாளரின் முகவரிக்கு நிதியை அனுப்ப வேண்டும் அல்லது நேரில் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெறவேண்டும் எனவும் கோரப்படுகிறது. (உ)

# ரயில்-கார் விபத்து

## எண்மர் பலி

கொழும்பு, புதன்

தலாவையில் இன்று நடைபெற்ற பயங்கர ரயில்-கார் விபத்து ஒன்றில் காரில் வந்த எண்மர் பலியாகினர்.

அனுராதபுரத்திற்கும், கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த ரயில் ஒன்று, மேற்படி காருடன் மோதியது. ரயிலால் மோதப்பட்ட கார் சுக்குநூறாகியது.

பொலிசார் இக்கோர விபத்துப் பற்றி விசாரணை நடத்துகின்றனர்.

# கொடிவாரம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் இந்து இளைஞர் மன்றத்தினர் மட்டும் தனியாக ஒரு கொடி வாரத்தை இன்று 5ம் தேதி தொடக்கம் 12ம் திகதி வரை நடாத்த உள்ளனர். இந்த கொடி விற்பனை மூலம் பெறப்படும் நிதி அநாதைகள் நலம் பேணல், இந்து இளைஞர் நலம்பேணல், ஆயநன் முயற்சிகட்கும் பயன்படுத்தப்படும். இந்த நிதி கைதடி அநாதை இல்லம்' யாழ் இந்து இளைஞர் மன்றம் வண். வடகிழக்கு சனசமூக நிலையம் ஆகியனவற்றின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் திட்டங்களில் பயன் படுத்தப்பட உள்ளது.

தொண்டர்கள் சிவகாமசுந்தரி நடேசப் பெருமானின் உருவம் பொறிக்கப்பட்ட கருமஞ்சள் நிறமுடைய அடையாளப் பட்டி அணிந்து கொடிகளை விற்பனை செய்வர் என்று மன்றத் தலைவரும், கொடிவார அமைப்பாளருமான சட்டத்தரணி திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராசா தெரிவிக்கிறார்.